விலை ரூபா: ௭.00 பக்கங்கள்:- 10 Registered as a News paper in Sri Lanka

வலம்புரி
VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 12 சனிக்கிழமை (28.09.2002) தொலைபேசி- 2223378 ஒலி 283

## விடுதலைப்போராட்ட வரலாற்றில் 2வது தடவை இடம்பெறும்

# அரசு- புலிகளிற்கிடையிலான

# கைதிகள் பரிமாற்றம் இன்று

## அரசு 13பேரையும் புலிகள் 7பேரையும் விடுவிப்பர்

(நமது சிறப்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையே இன்று காலை 10மணிக்கு இரண்டாவது தடவையாக யுத்தக் கைதிகள் பரிமாற்றம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து இடம்பெறவுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வின் போது ஊடகவியலாளர்கள், கைதிகளின் பெற்றோர்கள், உறவினர்களுடன் அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ மற்றும் உயர் படை அதிகாரிகளும் விடுதலைப்புலிகளின் சார்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் புலித்தேவன், இராணுவப் பிரிவைச் சேர்ந்த விசு, அந்தகன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

### விமானம் மூலம் அழைத்து வரப்படுவர்

இன்று இடம்பெறவுள்ள யுத்தக் கைதிகளின் பரிமாற்றத்தை அடுத்து அரசாங்கம் விடுவிக்கவுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் 11பேரும் விமான மூலம் வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டு ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கு பஸ் வண்டி மூலம் கொண்டு வரப்படுவர்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்

(10ம் பக்கம் பார்க்க)

## இன்று விடுதலை பெறும் கைதிகளின் பெயர் விபரம்

(கொழும்பு)

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே இன்று இடம் பெறவுள்ள கைதிகள் பரிமாற்றத்தின் போது விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ள கைதிகளின் பெயர் விபரம் வருமாறு:

எஸ்.ரி.பெர்னான்டோ, அலோயஸ் கெனடி, ஏகாபதி சந்திரமோகன், சுப்பிரமணியன் சந்திரமோகன், செல்லத்தம்பி பாஸ்கரன், கந்தசாமி லிங்கேஸ்வரன், சின்னத்தம்பி விக்னேஸ்வரன், தம்பையா தயாபரன், பாலசுந்தரம் கோபாலகிருஷ்ணன், நல்லதம்பி கேதீஸ்வரன், கிருஷ்ணபிள்ளை சிறியானந்தரூபன், [illegible]தபெங்கலன் தங்கராசா

இதேவேளை இரு பெண்போராளிகள் அவர்களது சொந்த விருப்

(10ம் பக்கம் பார்க்க)

### அரசுடன் சமரசத்தை ஏற்படுத்தும் வகையில்

## அரசியல் அமைப்புத் திருத்தத்தை வரைய பொ.ஐ. முன்னணிக்குள் முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்றக் கலைப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சபாநாயகருக்கு எழுதியிருந்த கடிதத்தின் அடிப்படையில் அரசியல் யாப்புத் திருத்தம் ஒன்றை வரைவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதற்காக அரசியற் சட்ட நிபுணரும் அரசியல் அமைப்புக் கவுன்சில் உறுப்பினருமான எச்.எல்.டி.சில்வாவும், ஜனாதிபதியின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் வியாழக்கிழமை சந்தித்து உரையாடியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(10ம் பக்கம் பார்க்க)

## பிரித்தானியத் தூதுவர் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஸ்ரெபன் ஈவன்ஸ் நேற்று வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக வன்னியில் நடைபெற்றுவரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பலாலி விமானத் தளத்தில் வந்திறங்கிய தூதுவர் ஸ்ரெபன் ஈவன்ஸ் ஏ-9 கண்டி வீதி

(10ம் பக்கம் பார்க்க)

## 5வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ தடை மருந்து இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இன்று சனிக்கிழமையும் அடுத்த மாதம் 26ந் திகதியும் போலியோத் தடுப்பு சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

**அழைத்து வரப்படுவர்**

இன்று இடம்பெறவுள்ள யுத்தக் கைதிகளின் பரிமாற்றத்தை அடுத்து அரசாங்கம் விடுவிக்கவுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் 11பேரும் விமான மூலம் வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டு ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கு பஸ் வண்டி மூலம் கொண்டு வரப்படுவர்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்

(10ம் பக்கம் பார்க்க)

# பிரித்தானியத் தூதுவர் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஸ்ரெபன் ஈவன்ஸ் நேற்று வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக வன்னியில் நடைபெற்றுவரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பலாலி விமானத் தளத்தில் வந்திறங்கிய தூதுவர் ஸ்ரெபன் ஈவன்ஸ் ஏ-9 கண்டி வீதி

(10ம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ. முன்னணிக்குள் முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்றக் கலைப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சபாநாயகருக்கு எழுதியிருந்த கடிதத்தின் அடிப்படையில் அரசியல் யாப்புத் திருத்தம் ஒன்றை வரைவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதற்காக அரசியற் சட்ட நிபுணரும் அரசியல் அமைப்புக் கவுன்சில் உறுப்பினருமான எச்.எல்.டி.சில்வாவும், ஜனாதிபதியின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் வியாழக்கிழமை சந்தித்து உரையாடியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(10ம் பக்கம் பார்க்க)

## 5வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ தடை மருந்து இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இன்று சனிக்கிழமையும் அடுத்த மாதம் 26ந் திகதியும் போலியோத் தடுப்பு சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ் நோக்கி வந்த பயணிகளின் பஸ் புத்தளத்தில் கோர விபத்து

## நால்வர் பலி, 54 பேர் படுகாயம்

(புத்தளம் நிருபர் எஸ்.ஆர்.எம். இர்சாத்)

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக வவுனியா நோக்கிச் சென்ற தனியார் பயணிகள் பஸ்ஸொன்று மதுரங்குளி 10வது மைல் கல்லில் விபத்துக்குள்ளானதில் நடத்துநர் உட்பட நான்கு பேர் பலியாகினர். 54பேர் கடுமையான காயங்களுக்குள்ளான நிலையில் புத்தளம், சிலாபம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




விபத்துக்குள்ளான பஸ்...

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 12.45மணியளவில் இக்கோர விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் வவுனியாவை நோக்கி 60 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ் வண்டி மதுரங்குளி 10வது மைல் கல்லிலுள்ள சிறு வளைவுப் பகுதியில் வைத்து ,சாரதியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி பாரிய மரமொன்றில் மோதுண்டது.

அதிகாலைவேளை என்பதால் பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளில் பெரும்பாலானோர் ஆழ்ந்த நித்திரையில் இருந்துள்ளனர் திடீரென பயணிகள் சிலர் கூக்குரலிட்டதனால் பதற்றமுற்று எழுந்த ஏனைய பயணிகள் பஸ் வண்டி மரத்தில் மோதியதையும், சிலர் பஸ்ஸிற்குள் இருந்த பயணிகளை ஜன்னல் வழியாக இழுத்து மீட்டதையும் கண்டதாக தெரிவித்தனர்.

பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானோர், வவுனியாவிலிருந்து ஓமந்தை ஊடாக யாழ்ப்பா

(10ம் பக்கம் பார்க்க)



அப்புறப்படுத்தும் காட்சி

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

✱ கூட்டுறவுச் சங்கங்கள்

# உண்மையுடனும் உரிமையுடனும் மக்களுக்காய் பாடுபட வேண்டும்

## மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் விஜிதரன்

(மந்திகை)

கூட்டுறவு சங்கங்கள் பாரிய அமைப்பாக மாறி தமிழீழ மக்களின் விடுதலைக்காக உண்மையுடனும் உரிமையுடனும் பாடுபட வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் விஜிதரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் நடுவர் பணியக கட்டிடத் திறப்பு விழாவில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் ந. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேலும் உரையாற்றும் போது,

கடந்த கால யுத்தங்களினால் எமது மக்களுடைய உடைமைகள் எதிரியினால் சிதைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பகுதியைப் பார்க்கும்போது எமக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றது. பெரும் நஷ்டங்கள் கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் சாவகச்சேரி மக்கள் மனவுறுதியுடன் கட்டடங்களை புனரமைத்து வருகின்றனர்.

இது எமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. சமாதானத்தில் இவர்கள் நம்பிக்கை வைக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

இந்த மண்ணில் மக்கள் எழுச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும். இதற்குக் கூட்டுறவு அமைப்புகள் வளர்ந்து பாரிய அமைப்பாக மாறி தமிழ் மக்கள் அச்சமின்றி இந்த மண்ணில் வாழ மக்களின் விடுதலைக்குப் பாடுபட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினருமான சிவாஜிலிங்கம் மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை, கடல்தொழிலாளர் சங்கங்களின் தலைவர் எஸ். சூரியமூர்த்தி, செயலாளர் சூரியகுமார் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

(உ-23)

### போலியோ வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண போலியோ சொட்டு மருந்து வழங்கும் வைபவம் இன்று கோழு புத்துறை சுவாமியார் வீதியில அமைந்துள்ள சிகிச்சை நிலையத்தில 7-30 மணிக்கு சுகாதரர சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் வைத்தியகலநிதி உ சிவபாதசுந்தரம மற்றும தாய்சேய்நல வைத்திய அதிகாரி வைத்தியகல நிதி ராதா கந்தசாமி ஐயர் ஆகியோர்தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியப் பிரதிநிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-5).

# நேர்முகப் பரீட்சை

தே.க. கல்லூரி அனுமதிக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2003ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வி' கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நூலகவிஞ்ஞானம் சமூகக்கல்வி, தமிழ்மொழி, இந்துசமயம், கிறித்துவம், விவசாயம், சித்திரம், நடனம், சங்கீதம், தொழில்நுட்பக்கல்வி- மனைப்பொருளியல் நாடகமும் அரங்கியலும் ஆகிய துறைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப்பரீட்சை பின்வரும் திகதிகளின் ஒழுங்கில் நடைபெறுமென நேர்முகப்பரீட்சை இணைப்பாளர் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் ஒக்டோபர் மாதம் 16ம், 17ம், 18ம் திகதிகளிலும்,

திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரி உவர்மலையில் 20ம், 21ம் திகதிகளிலும்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 22ம், 23ம், 24ம் திகதிகளிலும்,

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 25ம், 26ம் திகதிகளிலும்,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 27ம், 28ம், 29ம், 30ம் திகதிகளிலும் நடைபெறும். (ந)

# தமிழக முதல்வரின் உதவியுடன் வடக்கில் டாக்டர்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை போக்க முயற்சி

(தென்மராட்சி)

வடபகுதியில் நீண்டகாலமாக நிலவிவருகின்ற வைத்தியர்கள், தாதிமார்களுக்கான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு தமிழகத்தில் இருந்து வைத்தியர்கள் தாதிமார்களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனா தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

இதன்மூலம் வைத்தியர்கள் தாதிமார்களுக்கான தட்டுப்பாடு நீங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது என தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்றைய தினம சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தென்மராட்சி பிரதேசசெயலகத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில குறிப்பிட்டார்.

தென்மராட்சி பிரதேச செயலர் செ ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவிவருகின்ற வைத்தியர்கள், தாதிமார் தட்டுப்பாடு தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில்.

வடபகுதியில் நிலவிவருகின்ற வைத்தியர்கள், தாதிமார் தட்டுப்பாட்டின் காரணமாக எமதுமக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனை நீக்குவதற்கு எமது மருத்துவக் கல்லூரியில் பயின்று வெளியேறுகின்ற டாக்டர்கள் முழுமையாக உதவிபுரியாமை வருத்தத்துக்குரிய தாகும்.

தென்பகுதியில் இருந்து சிங்கள வைத்தியர்களையும் வரவழைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுவதாகவும் அவர்குறிப்பிட்டார்'

வடபகுதியில் நிலவிவரும் வைத்தியர்களுக்கான தட்டுப்பாடு 2003ஜனவரிமாதத்தில் இருந்து நீங்கிவிடும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

(உ-77)

### விபத்தில் தாயும் மகனும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேலணையில் மோட்டார் சைக்கிளும் வானும் விபத்துக்குள்ளானதில் மானிப்பாயை சேர்ந்த தாயும் மகனும் காயமடைந்தநிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த ஆர்-ரகுலராணி (வயது48) அவரதுமகனான ஆர்-மோகனராஜ் ஆகியஇருவருமே காயமடைந்தவர்களாவர்.

(த-5,6)

# மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சின்மூலம் உடன்தீர்வு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு இறுதிவரை காத்திராமல் உடனடியாக நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் நோக்கிலேயே சமாதானமுன்னெடுப்புக்கள் திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்றங்களின் சுயாதீனம் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன்பயன்களை மக்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர்-

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சுயகௌரவத்துடன் வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும்.

இதனை வடக்குக்கிழக்கில் மாத்திரமின்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முன்னெடுப்புக்களை உதாரணமாகக்கொண்டு ஏனையநாடுகளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்னெடுக்கலாம் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரன் தம்மிடம் தெரிவித்ததாகவும் பிரதமர் அங்குதெரிவித்துள்ளார்.

(த)

### பச்சைமரம் தறித்தவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கண்டி வீதியில் அமைந்துள்ள பழைய பூங்கா வளவினுள் நின்ற பச்சை மரங்களைத் தறித்த திருநகர் வாசிகளை யாழ். நகரப் பொலிஸார் நேற்றையதினம் கையும் மெய்யுமாகக் கைது செய்துள்ளனர். (உ-6)

### மேலுமொருபெண் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொலரா நோயினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்

வேலணையைச் சேர்ந்த எஸ். கண்ணம்மா (வயது50) என்ற பெண்ணே கொலரா நோயின் தாக்கத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(2-5)

### விளையாட்டு சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

முத்துத்தம்பி வித்தியாசாலை விடுதி மாணவர்களையும், தாயகம் விடுதி மாணவர்களையும் விளையாட்டு சுற்றுலா ஒன்றுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் வெள்ளைக்கடற்கரைக்கு அழைத்துச்செல்லவுள்ளனர்.

வெள்ளைக் கடற்கரையில் சுற்றுலா செல்லும் மாணவர் மத்தியில் விளையாட்டுப் போட்டி ஒன்றையும் லயன்ஸ் கழகத்தினர் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். (வ)

# இனப்பிரச்சினைக்கான தீர்வு அடுத்தஆண்டுக்குள் காணவேண்டும்

## கதிர்காமர் வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஆரம்பமாகியுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் பொதுஜன ஐக்கியமுன்னணி இறங்காதுஎன அதன் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும்சமாதானப்பேச்சுவார்த்தைகள் குறித்து கட்சியின் நிலைப்பாடுபற்றி நேற்று செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்;

இருதரப்பினருக்கும் இடையே ஆரம்பமாகியுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை நாம் ஆதரிக்கிறோம் அதேவேளை, நீண்டகாலத்துக்கு இழுத்தடிக்காது அடுத்த வருடத்துக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் காணப்படவேண்டும்.

இருதசாப்தங்களாக இடம்பெற்றுவந்த மோதல்கள் நீண்டகாலப் பிரச்சினைக்கான காரணங்களாகவுள்ளதால் குறுகிய காலத்துக்குள் இதற்கு தீர்வுகாணப்பட வேண்டும் எனவும் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இரண்டாம்கட்டப் பேச்சுக்கான நிகழ்ச்சிநிரல் என்ன என்பதுகுறித்து தனக்கு எதுவும் தெரியாததால் அதுபற்றி தான் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை எனவும்,

பொதுஜன ஐக்கிய முன்னணி, பேச்சுவார்த்தைகள் மூலம்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வுகாணப்பட முடியும்என சிந்தித்ததனாலேயே 1994 ஆம் ஆண்டு சமாதான முயற்சிகளை ஆரம்பித்துள்ளது எனவும்,

ஐக்கிய இலங்கைக்குள் சகல சமூகங்களும் எவ்விதபிரச்சினையும்இன்றி ஒன்றிணைந்து அமைதியான முறையில் வாழ வழிவகுக்கப்பட வேண்டும் எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

(உ-8)

### அறுவரிடம்

குற்றத்தைஒப்புக்கொண்ட நபர்களில இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாவும மற்றொருவருக்கு இரண்டாயிரம் ரூபாவும இருவருக்கு ஆயிரம் ரூபாவும் குற்றபபணம செலுத்துமாறு பதில் நீதிவான அ. பிறேம்சங்கர் உத்தரவிட்டார். (உ-23)

# வடக்கு-கிழக்கு மக்களைப் போன்று தெற்கு மக்களும் பாதிப்புற்றுள்ளனர்

## இன்றையநிலையில்அவர்களதுகுறைகளும் நிவிர்த்தி செய்யப்பட வேண்டும் - பிரதமர்

(கொழும்பு)

**தமது அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஆரம்பிக்கப்பட்டுள்ள நேரடி சமாதான பேச்சுவார்த்தைகள் எவ் விதமான தடைகள் ஏற்பட்டாலும்; அதனை எதிர்கொண்டு அர சாங்கம் தொடர்ந்தும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும்.**

இவ்வாறு பிரதமர்ரணில் விக்கிரமசிங்கா கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மண்டபத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளின் போது ஜனநாயகததின் உரிமைகளும், சட்டங்களும் என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் சலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்னெடுத்துச் சென்ற சமாதானமுறைகளை விட சிறந்த அணுகுமுறைகளுடன்எமதுஅரசாங்கம் அதனை நகர்த்திச் செல்கிறது.

கடந்த இருதசாப்தங்களாக யுத்தத்தினால்பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பிரதேசங்களை சேர்ந்த மக்கள் சமாதானக்காற்றை சுவாசிக்க விரும்புகிறார்கள். அவர்களால் தொடர்ந்தும் பொறுமை காக்கவோ அன்றி சாத்திருக்கவோ முடியாது எவ்வாறாயினும் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

நிரந்தர சமாதானத்தை நோக்காகக் கொண்டு அரசு செயற்படுகிறது. இதனடிப்படையில் தான் சர்வதேச நாடுகளின் உதவிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாகவே வடக்கு-கிழக்கின் மீள்குடியமர்வு, யுத்த பிரதேசங்களில் புதைக்கப்பட்டுள்ள 2மில்லியன் நிலக்கண்ணிவெடிகளை அகற்றல், புனரமைப்பு நடவடிக்கைகள் உட்படபல்வேறு வேலைத்திட்டங்கள மேற் கொள்ளப்படுகின்றன.

அத்துடன், சர்வதேச நாடுகளின் உதவிகளும் இதற்காக கோரப்பட்டுள்ளன.

அதேவேளை மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப் படாவிடின் பேச்சு வார்த்தைகளின்மூலம் எதிர் பார்க்கும் பலனை ஈட்டமுடியாது.

கடந்த கால யுத்தத்தினால் வட பகுதி மக்கள பாதிக்கப்பட்டதை போன்று, தென் பகுதி மக்களும் வரட்சிமற்றும் பொருளாதார சீர்குலைவுகளினால் பாதிப்படைந்துள்ளனர். இப்பாதிப்புகள்நிவர்த்தி செய்யப்பட வேண்டும்என்பதே தமது அரசின் இலக்காகும்.

இன்றைய சூழ் நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாகநடமாடி வருகின்றனர். இது தொடர வேண்டும் என்பதே தனது விருப்பம் ஆகும்.

அத்துடன், வடக்கு கிழக்கு பகுதிகளில் நிரந்தர சமாதானம் உறுதி செய்யப்படுவதற்காக, புலிகளுடன் இணைந்து விசேடபடை, மற்றும்இணைப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன இக்குழுவினர் நாட்டின் அபிவிருத்தி, மற்றும் உயர்பாதுகாப்பு வலய குடியேற்றம் உட்பட பலவற்றை கண்காணிக்கவுள்ளனர்.

சமாதான பேச்சுவார்த்தைகளில்தடங்கல் ஏற்பட்டாலும் அது பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்கப்பட்டு தொடர்ந்து முன்னேற்றகரமாக கொண்டு செல்லப்படும் என்று குறிப்பிட்டார்.

(உ-8)

## நாடுதழுவிய தமிழ்த்தின போட்டிகள் அடுத்தமாதம்

(கொழும்பு)

அகில இலங்கை ரீதியிலான தமிழ்த்தினப்போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர்மாதம் 5,6 ஆம்திகதிகளில் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கல்வி மனிதவள அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவிற்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம். நடராசா தெரிவித்துள்ளார்.

மாகாணமட்டத்தில் இடம் பெற்ற தமிழ்த்தினப்போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களும் முதலிடம்பெற்ற குழுநிகழ்ச்சிகளும் இதில் இடம்பெறவுள்ளன.

இதில் வடக்கு-கிழக்குமலையகம் உட்பட நாட்டின் பல்வேறு தமிழ்ப்பிரதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மத்திய கல்லூரியில் இலவச கணனிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கணனியின் அறிவைப் பெற்றுக் கொள்ளும் பயிற்சித் திட்டம் யாழ். மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப்பிரிவால் நடத்தப்படவுள்ளது. இப் பயிற்சித்திட்டத்தின்கீழ், Ms Word, Ms, Excel ஆகிய இரு பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தேசிய பாடசாலைகளின் முறைசாராக் கல்விப் பயிற்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் இப் பயிற்சித் திட்டத்திற்கு 50 மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பாடசாலையைவிட்டு வெளியேறிய சகல வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தினை உடன் கல்லூரி அலுவலகத்தில் பெற்று எதிர் வரும் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் 3 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சகலரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை அறிவித்துள்ளார். (உ)

## ஜனநாயக தொழிற்சங்க தலைமைத்துவ கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கல்வியகம், பிரடறிக் ஈபேட்மன்றம், இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்கம் ஆகியன இணைந்துநடத்தும் 'ஜனநாயக தொழிற்சங்க தலைமைத்துவம்' என்ற தலைப்பிலான மூன்றுநாள் கருத்தரங்கு நாளை யாழ். இந்துமகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இக் கருத்தரங்கின் ஆரம்ப நாள் நிகழ்ச்சிகள் நாளை காலை 9.30 மணிக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக பிரட்றிக் ஈபேட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி டிக்மென் நைற்செல், அதே மன்றத்தைச்சேர்ந்த திருமதி ஐரென் கஞ்லெற் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக் கருத்தரங்கில், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளதும் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் தாய்ச்சங்க, மாவட்ட மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இக்கருத்தரங்கிற்கான இணைப்பாளரும் பொதுச்செயலாளரான த. மகாசிவம் அழைப்புவிடுத்துள்ளார். (உ-3)

## இருவர் மீது விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்தையின் வங்கி வைப்பு ஆவணங்கள் தொடர்பாக தனியார் வங்கிகளை சேர்ந்த இரு அதிகாரிகள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இவ் விசாரணைகளிலிருந்து, இவ்வைப்புசான்றிதழ் சம்பந்தமான முக்கிய சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. (உ-8)

தனியார் மயப்படுத்தலை எதிர்த்து

## ம.வி.முன்னணிஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அரசசொத்துக்களை தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

மக்கள் விடுதலைமுன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை தெரிவித்துள்ளார்.

பல்வேறு அரசியல்கட்சிகள் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாகவும்,

இவ் ஆர்ப்பாட்டம் குறித்த திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (உ-8)

## நிவாரண உதவிகளை இ.செ.ச. அதிகரிக்கும்

(கொழும்பு)

இலங்கையின் வட கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்துள்ள மக்களிற்கான நிவாரணஉதவிகளை அதிகரிக்கப் போவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான நிதியுதவி அலுவலகம் ஸ்பெயினின் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக வழங்கியுள்ள நிதியையேஇதற்காகப் பயன்படுத்தப் போவதாகவும்,

அடுத்த 6 மாதங்களில், இடம் பெயர்ந்த 6 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவ உள்ளதாகவும் குறுகியகால உதவிகளையும் நீண்டகால தேவைகளையும் பூர்த்தி செய்யவுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. (உ-7)

## கசிப்பு விற்பனை செய்த அறுவரிடம் 17 ஆயிரம் குற்றப்பணம் அறவீடு

(மந்திகை)

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்த ஆறுபேரிடம் இருந்து சாவகச்சேரி நீதிமன்றம் 17 ஆயிரம் ரூபா குற்றப்பணம் அறவிட்டுள்ளது.

கடந்தவாரம் கொடிகாமம் வரணிப் பகுதிகளில் சோதனைகளை மேற்கொண்ட கொடிகாமம் மதுவரிப் பரிசோதகரால் வீடுகளில் கசிப்பு வைத்திருந்தமை இனங் காணப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

(2-ம் பக்கம் பார்க்க)

## சங்கே முழங்கு

### குறிகாட்டுவான் பாலம் திருத்தப்பட வேண்டும்

தற்போதைய நாட்டுச் சூழ் நிலையினால் தினமும் ஆயிரக் கணக்கான தென்னிலங்கை மக்கள் வட இலங்கை நோக்கி வந்து போய்க் கொண்டுள்ளனர் அவர்கள் அனைவரும் நயினாதீவிற்கும் சென்று தான் திரும்புகின்றனர். அதிகாலை நாலு மணிக்கே குறிகாட்டுவான் துறையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுமக்கள் வரிசைக் கிரமமாக அனுப்பப்படுகின்றனர் இவர்களோடு நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்திக்குச் செல்கின்ற பெருந் தொகையான அடியவர் கூட்டமும் சேர்ந்து விடுவதால் மக்கள் கூட்டம நிறைந்து காணப்படுகின்றது.

குறிகாட்டுவான்பால முகப்புச் சேதமுற்று இரும்புக் கேடர்கள் நாட்டப்பட்டு அதன் பொறுப்பில் தான் பால முகப்பு பொறுத்துள்ளது. இதனால் பாலத்தோடு மோட்டார் படகுகளை அணைபபதில் பெரும சிரமத்தையும் கால தாமதத்தையும் ஏற்படுத்துகின்றது. எனவே பால முகப்பு விஸ்தரிக்கப்பட்டு திருத்தப்பட்டால் மக்கள் தாமதமின்றி பிரயாணத்தை மேற் கொள்ள ஏதுவாக அமையும்' சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்கவில்லையானால் பால முகப்பு கடலில் மூழ்கும் நிலை ஏற்படலாம் அதற்கு முன் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

நா. கோபாலகிருஷ்ணன்
யாழ்ப்பாணம்.

# ஈராக் மீது தாக்குதல் தொடுக்கும் நோக்கில் அமெரிக்கா தீவிர முஸ்தீபு

## கண்காணிப்பு அமைப்பு அதிர்ச்சி தரும் தகவல்

(வாஷிங்டன்)

சர்வதேச சட்டவிதிகளை மீறி மனித குலத்தை பேரழிவுக்கு உள்ளாக்கும் அதிநவீன இரசாயன ஆயுதங்களை அவசர அவசரமாக அமெரிக்கா தயாரித்து வருவதாக "சண்டைம் புளூ ஜக்ற்" எனப்படும் தனியார் ஆயுதக் கண்காணிப்பு அமைப்பு அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டுள்ளது.

மனித நரம்பு மண்டலங்களைச் செயலிழக்கச் செய்யும் மருந்துகள், மனநிலையை கிறங்கடிக்கும் மருந்துகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் பொருட்டு அதிநவீன ஆயுதங்களை அமெரிக்கப் பாதுகாப்புப் பிரிவினர் இரகசியமாகத் தயாரித்து வருவதாக அவ்வமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி அல்லது பெப்ரவரியில் அமெரிக்கா ஈராக்மீது தாக்குதல் தொடுக்கக் கூடும் என ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அமெரிக்கா தயாரித்து வரும் இந்த இரசாயன ஆயுதங்கள் ஈராக்கை தாக்குவதற்குப் பயன்படுத்தப் படவிருப்பதாக அந்த அமைப்பு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

மாத்திரைகள் அளவில் நீண்டதூரம் வீசப்படக்கூடிய வடிவமைப்பில் இந்த இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது.

இதேவேளை ஈராக்மீது தாக்குதல் தொடுக்கும் நோக்கில் அனைத்து முயற்சிகளையும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் முடுக்கிவிட்டுள்ளதுடன் கடல் கடற்பகுதியில் அமெரிக்க கடற்படையினர் ஈராக்மீதான தாக்குதலுக்கான ஒத்திகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும்,

ஈராக்கின் தலைநகர் பக்தாத் திற்கு அண்மையிலுள்ள பயணிகள் விமான நிலையம் ஒன்றின் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த)

# அமெரிக்கா போர் தொடுப்பதை எதிர்த்து ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சர் அறிக்கை

(பேர்லின்)

ஈராக்கில் ஆயுதக் குறைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் போர்வையில் அந்நாட்டின் மீது அமெரிக்கா போர் தொடுப்பதை தமது நாடு முழுமையாக எதிர்ப்பதாக ஜேர்மனியின் பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் ஸ்ரக் உறுதிபடக் கூறியுள்ளார்.

போர் மூண்டால் கொடூரமான தாக்குதல் இடம்பெறுவதுடன், போரில் ஈடுபடும் இருதரப்பிலும் பேரழிவுகளும், சேதங்களும் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் மீதான விடயத்தில் அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கைகள் தொடர்பாக ஜேர்மனி விமர்சித்து வருவதையிட்டு அமெரிக்கா ஆத்திரமடைவது தாக்கத் தெரியும் எனக் கூறிய ஸ்ராக் இரு நாடுகளுக்கு மிடையில் உறவுகள் விரைவில் முன்னேற்றமடையும் எனவும் கூறியுள்ளார்.

மேலும் ஈராக்கிடம் 4இலட்சம் துருப்புக்கள் இருப்பதால் போர் கொடூரமானதாக அமையும் என்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவை என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-04)

# ஏவுகணைத் தாக்குதலைக் கண்டித்து ஐ.நா. செயலர் அனான் அறிக்கை

(இஸ்லாமாபாத்)

ஹாஷா நிலப்பரப்பு மீது இஸ்ரேலியப் படையினர் நேற்று முன்தினம் நடத்திய ஏவுகணைத் தாக்குதல் தொடர்பாக அதிர்ச்சி அடைந்துள்ள ஐக்கிய நாடுகள் செயலாளர் கோபி அனான் தொடர்ந்தும் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என அச்சம் கொண்டுள்ளதாக அவரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும், சர்வதேச மனிதாபிமான சட்ட திட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டுமெனவும், மனித உயிர்களைப் பாதுகாக்கும் விடயங்களில் இஸ்ரேல் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமெனவும் இஸ்ரேலிய அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாக .அனான் வலியுறுத்தியுள்ளதாகவும் அவரின் பேச்சாளர் பெற்அக்ஹார் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹாஷா நிலப்பரப்பில் குடியிருப்புப் பகுதிகளில் இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 2 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன் 25இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் 12பேர் சிறுவர்களாவர். (சு-04)

# கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் செச்சினியாவில் சம்பவம்

(மொஸ்கோ)

செச்சினியா எல்லைக்கருகே இன்டி செட்டிய குடியரசில் சுமார் 100செச்சினிய கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் ஒன்றைத் தொடுத்த பின்னர் தப்பியோடி விடார்கள் என ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

அருகிலுள்ள வனப்பகுதியில் பலவாறாகத் தேடுதல் போட்டும் பலன் எதுவும இல்லை என்று இப்பகுதியிலிருந்து ரஷ்ய தலைமை தளபதி தெரிவித்துள்ளார்.

10 ரஷ்யப் படையினரும், 30கிளர்சசியாளர்களும் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 200 போராளிகள் கொண்ட கிளர்ச்சியாளர்கள் குழு அண்டை நாடான ஜோர்ஜியா நிலப்பரப்பிற்குள் நுழைந்துள்ளனர் என ரஷ்யாகள் தகவல் தெரிவித்துள்ளனர். (சு)

# ஆஜென்ரீனாவின் நிதி நிலைமையை விளக்கி நாணய நிதியத்துடன் பேச்சு

(ப்யூனஸ் அயர்ஸ்)

ஆஜென்ரீனாவில் ஏற்பட்டுள்ள நிது நெருக்கடி மற்றும் கடன் வலுவை சீர் செய்யும நிதியுதவியைப் பெறும் பொருட்டு சர்வதே நாணய நிதியத்துடன் ஆஜென்ரீன அதிகாரிகள் பேச்சுக்களை நத்தவுள்ளனர்.

இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் கடந்த 9மாதங்கள் இடம் பெற்றுவந்துள்ள போதிலும் இருதரப்பினருக்குமிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது என்றும்,

எவ்வாறாயினும் பேச்சு வார்த்தையை தொடரப் போவதாகவும், மட்டுப்படுத்தப்பட்டதொரு தொகையை நிதியுதவியாகப் பெறுவதற்கு கடுமையாக முயற்சி செய்யப் போவதாகவும் ஆஜென்ரீன பொருளாதார அமைச்சர் றொபட்டேலஜன்யா தெரிவித்துள்ளார். (சு-04)



சென்னையில் பிடிபட்ட தாவூத் இப்ராகிமின் கூட்டாளியான இம்ரானை, நேற்று மும்பை காவல் துறையினர் சென்னையில் இருந்து மும்பைக்கு அழைத்துச் சென்றனர்.

# உலக தரிசனம்

### போதைப்பொருள் கடத்தலில் மூவருக்கு மரண தண்டனை

(டுபாய்)

போதைப்பொருள் கடத்திய குற்றசசாட்டின் கீழ்துபாயில் வாழும் இந்தியர்கள் மூவருக்கு மரணதண்டனை விதிக்க டுபாய் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமீத் முஹைதீன் (வயது - 40), அப்துல் ரஹ்மான் இப்ராஹிம்(30), செபஸ்டியன் பொரியன் ஆகிய மூன்று பேரே 2கிலோ எடை கொண்ட ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களை வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். (சு)

### எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் அமெரிக்கக் குழு

(லண்டன்)

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதிக்கு அமெரிக்கப் பாதுகாப்பு ஆலோசனை குழுவினர் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்கள்.

40பேர் கொண்ட குழுவினர் இப்பகுதியை பார்வையிட இருப்பதாக பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவிக்கிறது.

அமெரிக்க பாதுகாப்புத் துறையின் கொள்கை குறித்த செயலாளர் டக்ளஸ் தலைமையிலான இக்குழுவினர் எல்லைப் பகுதியில் ராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களுடன் பேச்சு நடத்துவார்கள் என்றும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் அந்நாட்டு பாதுகாப்புத் துறையினருடன் பேச்சு நடத்திய பின்னர் இந்த பயணத்தை மேற்கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### பாதுகாப்புப் பேரவையில் 5நாடுகள் அங்கத்துவம்

(வாஷிங்டன்)

ஐக்கியநாடுகள் பாதுகாப்புப் பேரவையில் ஜேர்மனி,ஸ்பெயின், பாகிஸ்தான், அங்கோலா, சிலி ஆகிய நாடுகள் புதிய அங்கத்துவ நாடுகளாக நேற்றுமுன்தினம் தெரிவாகியுள்ளன. இந்த 5நாடுகளின் பெயர்கள் உறுதியாகியுள்ள நிலையிலும் ஜேர்மனியின் அங்கத்துவமே முக்கியத்துவம் பெறுவதாக ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். (சு)

# காவிரி நீர் பிரச்சினை பற்றி கண்காணிப்புக் குழு பார்வையிட்டது

(புதுடில்லி)

காவிரி கண்காணிப்புக்குழு நேற்றுக் கர்நாடக மாநிலத்திலுள்ள கவினி, கேமாவதி, காரங்கி ஆகிய நீர்த் தேக்கங்களைப் பார்வையிட்டது. மேட்டூர் அணையை இந்தக் குழு பார்வையிடுவதற்கு தமிழ்நாட்டு அரசு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அந்தக் குழுவினர் நேற்று முன்தினம் மேட்டூர் வருவதாக இருந்த திட்டத்தைக் கைவிட்டனர்.

தமிழ் நாட்டிற்கு காவிரி நீரை விடக் கூடாது என வலியுறுத்தி மைசூர், மாண்டியா, காம்ராஜ் நகர் மாவட்ட விவசாயிகளின் போராட்டம் நேற்று வரை தொடர்ந்தது. இந்தக் குழு கிருஷ்ண நாத்சாகார் அணையைப் பார்வையிட்டது என்றும்,

பெங்களூரில் மீண்டும் நடைபெறும் இந்தக் குழுக் கூட்டத்தில் தமிழக கர்நாடக மற்றும் புதுவை காவிரி பாசன விவசாயிகளின் நீர்த் தேவை மற்றும் அணைப்பில் நீர் இருப்பு மற்றும் நீர் வரவு ஆகியன தொடர்பான ஆய்வறிக்கை முடிவு செய்யப்பட்டு பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும்,

தமிழ் நாடு இந்தப் பிரச்சினை குறித்து கர்நாடகமீது தொடுத்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்பாக இம்மாதம் 27ஆம் திகதிக்குள் மத்திய அரசு மேட்டூர் அணைக்கு வந்து சேரும் தினசரி நீர் வரவு பற்றிய தகவல்களை தெரிவிக்க வேண்டுமென்று உச்ச நீதி மன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே.

# சமாதான முன்னெடுப்பு பற்றி அங்கோலாவில் ஐ.நா. தலையீடு

(லுவாண்டா)

அங்கோலாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முன்னெடுப்புகள் குறித்து கவனம் செலுத்திவரும ஐக்கிய நாடுகள் சபை அந்நாட்டு அரசிற்கும் முன்னாள் போராளிகளுக்குமிடையே நிலவும் முரண்பாடுகளைக் களைவது தொடர்பாக நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியுள்ளது,

இவ்விடயம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள கூட்டு ஆணைக்குழு பிரதி நிதிகள் இன்னும் பல விடயங்களை ஆராயவுள்ளதாகவும், அதற கேற்ப செயற்பாடுகள் அமைய வேண்டியிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

அங்கோலா அரசும் யுனிற்றா போராளிகளும் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைகள் முறையாகப் பேணப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கவே இந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும்,

கடந்த ஏப்ரல் மாதம் செய்து கொளளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பலானக கடந்த ஓகஸ்ட் மாதத்திலிருந்து இவ்விருதரப்பினரிடையேயும் சுமுக நிலை தோன்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சு-04)

# சுங்க அதிகாரிகளை அனுமதிக்க ஜப்பான் இணக்கம்

(டோக்கியோ)

அமெரிக்காவிற்கு அனுப்புவதற்கென ஜப்பானியத்துறை முகங்களில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ள கொள்கலன்களில் அணுகுண்டுகள், பாரிய அழிவுகளை ஏற்படுத்தும ஆயுதங்கள் இருக்கின்றனவா என்பதை கண்டறிவதற்கு அமெரிக்க சுங்க அதிகாரிகளைத் தமது நாட்டிற்குள் அனுமதிக்க ஜப்பான் இணங்கியுள்ளது.

உலகவர்த்தகமையம், பெண்டஹன் ஆகியவற்றின் மீது கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலையடுத்து மேலும் பல தாக்குதல்கள இடம்பெறலாம் என்ற அச்சம் அமெரிக்க அதிகாரிகளுக்கு நிலவி வருகின்றமையாலேயே மேற்படி ஆயுதப் பரிசோதனை நடத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (சு-04)

# இந்தியத் தொழிலாளர்களுக்கு மலேசியாவில் வேலைவாய்ப்பு

(புதுடில்லி)

மலேசியாவில் வேலை செய்வதற்காக இந்தியத் தொழிலாளர்களையும் தொழில் முறை நிபுணர்களையும் வேலைக்கு எடுக்கும் போது மேம்பட்ட நேயமான ஒரு ஒப்பந்த முறையில் இருக்க வேண்டும் என்று இந்தியா கூறியுள்ளது.

நேற்றுக் கோலாலம்பூரில் நடைபெற்ற கூட்டுக்கமிஷன் கூட்டத்திலேயே மலேசியாவில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளரின் நிலை பற்றியும், அவர்களது பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இதில் எடுக்கப்பட்ட முடிவுகளை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந் சிங்கா அங்கீகரித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சு)



குஜராத் அக்ஷார்தாம் கோவிலில் நடந்த பயங்கரவாதிகளின் தாக்குதல் சம்பவத்தில் தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த கமாண்டோ ஒருவரும் பலியானார். அந்த கமாண்டோவின் உடல் ராணுவ மரியாதையுடன் இறுதி சடங்கிற்காக கொண்டு செல்லப்படும் காட்சி

# குறைமாதமாகப் பிறந்த 10 சிசுக்களின் சடலம் சுடுகாட்டில்

## ஆண்டிப்பட்டியில் சம்பவம்

(புதுடில்லி)

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியிலுள்ள சுடுகாட்டில் குறைமாதமாகப் பிறந்த ஓர் ஆண்சிசு மற்றும் 9 பெண் சிசுக்களின் சடலங்கள் குடுவையில் போட்டு வீசப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் சுடுகாட்டில் இருந்து காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட இந்த சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக மதுரை மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இச்சம்பவம் குறித்து அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதும் விரைந்து வந்து அவற்றைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர் என்றும்,

இவை மருத்துவமனையில் சோதனைக்காக வைக்கப்பட்டிருந்த குறைமாதக் குழந்தைகளின் சடலங்களாக இருக்கலாம் என அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (சு)

# இன்று ஒரு தகவல்

## போதும் என்கிற மனம்

ஓர் ஊரில் ஒரு பெரியமனிதர் இருந்தார். வசதியில்தான் பெரிய மனிதரே தவிர, குணத்திலே அப்படி இல்லை. இன்னும் பெரிய மனிதராக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனால் யாருக்கும் ஒரு பைசா கொடுக்கமாட்டார். மகா கஞ்சப் பிரபு. அடுத்தவர்கள் நன்றாக இருந்தால் அதை இவரால் தாங்கிக் கொள்ள முடியாது. பொறாமைப் படுவார். அப்பேர்ப்பட்ட பெரிய மனிதர். அவரின் வீட்டிற்கு நேர் எதிரில் ஒரு ஏழை இருந்தார். இவர் மிகவும் நல்லவர். அடுத்தவர்கள் கஷ்டப்பட்டால் அதை இவரால் தாங்கிக் கொள்ள முடியாது. தான் கஷ்டப்பட்டாலும் அடுத்தவர்களுக்கு உதவி பண்ண வேண்டுமென்று நினைப்பவர்.

ஒரு நாள் ஒரு சந்நியாசி அந்த ஊருக்கு வந்தார். அந்தப் பெரிய மனிதர் வீட்டுக்கு முன்னால் போய் நின்றார். கதவைத்தட்டினார். கதவைத் தட்டிய சத்தம் உள்ளே இருந்த பெரிய மனிதரின் காதில் விழுந்தது. இருந்தாலும் அவர் கதவைத் திறக்கவில்லை. ''கதவைத் திறந்தால் யாராவது ஏதாவதுகேட்பார்கள். கொடுக்க வேண்டியிருக்கும்'' என்று நினைத்துக் கொண்டு இருந்து விட்டார்.

சந்நியாசி கொஞ்சநேரம் நின்று பார்த்தார். யாரும் கதவை திறக்க வில்லை. என்றவுடன், எதிர்வீட்டிற்குச் சென்றுவிட்டார். அதுதான் அந்த ஏழையின் வீடு. கதவை தட்டினார். உடனே அந்த ஏழையும் அவரின் சம்சாரமும் கதவைத் திறந்தார்கள். சந்நியாசியைக் கண்டார்கள். உள்ளே வரசொல்லி கூப்பிட்டார்கள். உட்கார வைத்தார்கள். இரவுச் சாப்பாடு முடிந்து போய்விட்டது. அதனால் புதிதாகச் சமையல் செய்து அவருக்குப் போட்டார்கள்.

சந்நியாசி திருப்தியாகச் சாப்பிட்டார். சாப்பிட்டுமுடிந்த மகிழ்ச்சியில் அவர்களைப் பார்த்து 'எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது... உங்களுக்கு ஏதாவது உதவிசெய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன் ஏதாவது மூன்றுவரம் கேளுங்கள் தருகின்றேன்!' என்றார். அதற்குஅந்த ஏழையும் அவரின் சம்சாரமும், 'உங்கள் அன்புக்கு மிகவும் நன்றிசுவாமி இருந்தாலும் எங்களுக்கு வரமெதுவும் தேவையில்லை ஏனென்றால் இப்பொழுதே நாங்கள் இருவரும் மிகவும்சந்தோஷமாகத் தான் இருக்கிறோம' என்றார்கள். இருப்பதைக் கொண்டு திருப்தியடைகின்ற ரகம் அவர்கள்.

'போதும்என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்கின்ற பொன்மொழியை புரிந்துவைத்திருக்கிறவர்கள் போலிருக்கிறது. சரிஎன்று சொல்லிச் சந்நியாசி புறப்பட்டார். இருந்தாலும் அவரால் சும்மாபோக முடியவில்லை. இவர்களுக்கு ஆசீர்வாதம் பண்ணியே தீரவேண்டுமென்று முடிவுபண்ணினார். ஆசீர்வாதம்பண்ணினார். உடனே அந்த ஏழையினுடைய வீடு ஒரு மாளிகையாக மாறியது. எல்லாவசதிகளும் வந்துவிட்டது.

அடுத்தநாள் காலையில் அந்தப்பெரிய மனிதர் தன் வீட்டுவாயில் கதவைத்திறந்து பார்த்தார். ஒரே ஆச்சரியம். எதிரில் வழக்கமாகப் பார்க்கின்ற குடிசையைக் காணவில்லை. அது மாளிகையாக மாறியிருக்கின்றது. இதற்கு என்னகாரணம்என்று விசாரித்தார். விபரத்தைப்புரிந்து கொண்டார். உடனே அந்தச் சந்நியாசியைத் தேடிக் காரை எடுத்துக்கொண்டு கிளம்பினார். ஒரு காட்டுக்குள் அவர் உட்கார்ந்திருக்கிறார். அவரின் காலில்போய் விழுந்தார். 'என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் சாமி ஏதோ தெரியாத்தனமாக அப்படி நடந்து கொண்டேன்' என்றார்.

'இப்பொழுதுஉனக்குஎன்ன வேண்டும்' என்று கேட்டார் சந்நியாசி. 'வேறு ஒன்றும் வேண்டாம். அந்த ஏழைக்கு கொடுப்பதாகச் சொன்ன அந்த மூன்றுவரங்களை மட்டும்எனக்குக் கொடுத்தால் போதும்' என்றார். சரி கொடுக்கிறேன் ஆனால் ஒரு விஷயம். உனக்கு என்ன வேண்டுமென்று நீ முதல் மூன்று தடவைஎதை நினைக்கிறாயோ அது அப்பொழுதே கிடைத்து விடும்' என்று சொல்லி அனுப்பி விட்டார் சந்நியாசி.

சரி என்று வரத்தை வாங்கிக் கொண்டு அந்தப் பெரிய மனிதர் மிகவும் உற்சாகமாகக் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். வழியில் ஒரு இடத்தில் சகதியில்கார் மாட்டிக் கொண்டது. அவருக்கு எரிச்சலாக போய் விட்டது 'நமக்கு வரம் கிடைத்த விபரத்தைச் சிக்கிரமாகப் போய் ஊர்முழுவதும் சொல்லலாம் என்று நினைத்தால் இடையில் இந்தக்கார் இப்படி மக்கர் பண்ணுகிறதே. இந்தக் காரிருந்தாலும்ஒன்றுதான். எரிந்து போனாலும் ஒன்றுதான் என்று நினைத்தார். அவ்வளவுதான் அவர் வாங்கிய வரம் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. கார் அப்படியே தீப்பிடித்து எரிந்து சாம்பலாகப் போய் விட்டது. வாங்கிய முதல் வரம் தீர்ந்தது.

சரிபரவாயில்லை... இன்னும் இரண்டுவரங்கள் பாக்கி இருக்கின்றன. பார்த்து கொள்ளலாம் என்று நினைத்து நடந்தே வீட்டுக்குப் புறப்பட்டார். உச்சி வெயில். வியர்க்க விறுவிறுக்க நடந்து வந்து கொண்டிருக்கிறார். தாகம் வேறு. தண்ணீர் கிடைக்கவில்லை. மனைவியை நினைத்தார். நான் இப்படிக் கொதிக்கின்ற வெயிலில் நடந்து கொண்டிருக்கின்றேன். அவள்மட்டும் ஆனந்தமாக ஏ.ஸி ரூமில் பங்களாவுக்குள் உட்கார்ந்திருப்பாள். என்கஷ்டம் அவளுக்கு என்ன தெரியும்? அந்தப் பங்களா பற்றி எரிந்தால தான் என் கஷ்டம் அவளுக்குப் புரியும் என்று நினைத்தார். அவ்வளவு தான். இரண்டாவது வரம் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. பங்களாபற்றி எரிந்து போனது. மனைவிக்கோ தீக்காயம். அதை நேரில் பார்த்தார்.

''இப்பேர்ப்பட்ட கஷ்டத்தைபார்ப்பதற்காகவா கடவுள் கண்ணைக் கொடுத்தார்? இந்தகண் இருந்து என்ன பிரயோசனம்? என்று நினைத்தார். அவ்வளவுதான். மூன்றாவது வரமும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. பார்வை போய்விட்டது.

இந்தக் கதையிலிருந்து ஒரு விஷயம் கவனித்தீர்களா? வரம் வாங்கியும் அது அந்தப் பெரிய மனிதனுக்கு நல்ல விதமாகப் பயன்படவில்லை. அதற்கு என்ன காரணம்? பொறாமை-சுயநலம் முன்கோபம் எல்லாம் தான், இந்த மூன்று குணங்களும் இருந்தால், அடுத்தவர்கள் நல்லது செய்தாலும் அவை நமக்கு நல்லவிதமாக உபயோகப் படமாட்டா.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# யாழ். செல்ல வேண்டாமென உல்லாசப் பயணிகளுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டுப் பகுதியில் வாந்திபேதிநோய் அண்மைக்காலங்களில் பரவி இருப்பதால்சுற்றுலாப்பயணிகள் எவரையும் யாழ்செல்ல வேண்டாம் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மையில் இரண்டுபேர் வாந்திபேதி நோயினால் பலியாகிஉள்ளனர் அத்துடன் 28பேர் இந்நோய்த் தொற்றுக்கு உள்ளாகி யிருக்கின்றார்கள் என்பதையும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டி உள்ளது.

இந்தப்பகுதிகளுக்கு அத்தியாவசிய தேவைகருதி பயணம் செய்பவர்களும் உணவு விடயத்தில் கவனமாக இருக்குமாறு சுகாதார அமைச்சு யோசனை தெரிவித்துள்ளது.

வடக்கு பகுதிக்குசெல்பவர்களுக்கு வவுனியாவில் சுகாதாரஅமைச்சு நோய் சம்பந்தப்பட்ட கருத்துரைகளையும் வழங்கிவருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய புத்தளப் பகுதி நபர்ஒருவருக்கு வாந்திபேதிநோய் கண்டுளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (உ-7)

# இரராசி பலன்

28 - 9 - 2002

(புரட்டாதி 12, சனி)
ஸப்தமி வை.5 50 வரை
ரோகிணி காலை 7 18 வரை
இராகுகாலம்-9.02-10.32
நல்லநேரம்-3.02-4.32
அமிர்தசித்தம்,
புரட்டாதிச் சனி

**மேடம்**
தொழில் கஷ்டம், வாக்கு கலகம், பெரியோர் ஆதரவு, பொருள் விரயம்.

**இடபம்**
புதிய பொருள் சேர்க்கை, தேவையற்ற மனஸ்தாபம், காரிய தாமதம், பிரயாணம்,

**மிதுனம்**
உணர்ச்சி வசப்படல், சென்றஇடத்தில் செல்வாக்கு. முயற்சி தாமதம், சயன சுகக் குறைவு.

**கடகம்**
நண்பர்கள் சந்திப்பு, பெருமையடைதல், பொருள் சேர்க்கை, காரிய சித்தி.

**சிங்கம்**
அபகீர்த்தி, உற்சாகம், அதிக பிரயாசை, முயற்சி பலிதம்.

**கன்னி**
புதிய திட்டமிடல், வீண் பயம், உடல் களைப்பு, எதிர்பாராத நன்மை.

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, போசன சுகம், அமைதிக் குறைவு, காரியதடங்கல்.

**விருச்சிகம்**
பெரியோர் ஆதரவு, திடீர் பயணம், எடுத்த காரியம் கைகூடும், தன லாபம்.

**தனுசு**
காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, சுவாரஸ்யம், தேக ஆரோக்கியம்.

**மகரம்**
புத்திரரால் மனஸ்தாபம், முயற்சி மந்தம், கௌரவக் குறைவு, குடும்ப சுகம்.

**கும்பம்**
தன்னம்பிக்கைக் குறைவு, ரோக பயம், காரிய தாமதம், அபகீர்த்தி.

**மீனம்**
முயற்சி கைகூடும், அன்னியார் உதவி, பிரயாணநன்மை, வாக்கு பலிதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# சாவகச்சேரி நகரத்தில் 70 வர்த்தக நிலையங்கள் மீள இயங்குகின்றன

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் தற்போது சுமார் 70 வர்த்தக நிறுவனங்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக சாவகச்சேரிகைத்தொழில் வணிகர் மன்றம் தெரிவித்துள்ளது.

இன்னமும் 300 க்கு மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்காது இருப்பதாகவும் அறிபப்படுகிறது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் இப்பகுதிவர்த்தக நிலையங்கள் அனைத்தும் முற்றாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-77

# சங்கானைச் சந்தையில் ஆடுகள் அட்டகாசம்

(சங்கானை)

சங்கானை மரக்கறிச் சந்தையில் கட்டாக்காலி ஆடுகள் பெரும் நாசம் விளைவித்து வருவதாக பாதிக்கப்பட்ட வியாபாரிகளால் சங்கானைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வியாபாரம் முடித்து சந்தையில் பத்திரப்படுத்தும் மரக்கறி வகைகளை இவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடுகள் உணவாக்கியும், சேதப்படுத்தியும் வருகின்றன.

இது குறித்து வலிமேற்குப் பிரதேச சபையிடம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-123)

# 19 வது திருத்தச்சட்ட மூலம் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு முரணானது

(கொழும்பு)

அரசியலமைப்புக்கான 19 வது திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்புச்சட்டத்திற்கு முரணானது. அதன் முகப்புரையில் வடக்கு-கிழக்கு ஆயுதப் போரிற்கு அரசியற் சட்டத்தின் மூலம் தீர்வுகாண்பதாக குறிப்பிட்டுள்ளமையும் அதற்கென பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்குவது எனக் கூறப்பட்டுள்ளமையும் மக்களின் இறைமை முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளதை காட்டுகிறது.

இது அரசியற் சட்டத்தின் உறுப்புரை 2 இனால் பாதுகாக்கப்படும் இலங்கையின் ஒற்றையாட்சி முறையை சிதைக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும்.

இவ்வாறு, ஸ்ரீ. ல. சு. கட்சியின் சட்ட அறிஞர்கள் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றின் மூலம் முறைப்பாடு செய்துள்ளனர்.

19 வது திருத்தச் சட்டமூலம் அரசியற் சட்டத்தின் அடிப்படைகளைமீறுவதுடன், மக்களின் இறைமையையும் மீறுகிறது என்று தீர்ப்பளிக்குமாறு கட்சியின் துணைச் செயலாளர் பத்மசேகர தனது மனுவில் கேட்டுள்ளார். (உ)

# குறத்திப் பெண்கள் பஸ்பயணிகளிடம்கைவரிசை

(தென்மராட்சி)

பஸ்பிரயாணிகளிடம்பணம் திருடும்சம்பவங்களில் குறத்திப் பெண்கள் தமது கைவரிசையைக்காட்டி வருகின்றனர்.

நேற்றுமுன் தினம் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிப் புறப்பட்டபஸ்வண்டியில் பயணம் செய்த இளம் பெண்மணிஒருவரின் கைப்பையைத் தந்திரமாகத் திறந்து அதில் இருந்த 2 ஆயிரம் ரூபாரொக்கப்பணம்திருடப்பட்டுள்ளது.

அதேபோல கடந்த புதன் கிழமை பஸ் வண்டியில் பயணித்தகல்வித்திணைக்கள அதிகாரியின் கைப்பையில் இருந்த சுமார் 6 ஆயிரம் ரூபாவும் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவங்களின் பின்னணியில் தற்போதுயாழ்நகரில் நடமாடிவருகின்ற குறத்திப் பெண்கள் ஈடுபட்டுள்ளனர் எனத்தெரியவருகின்றது. (உ-77)

# ஆங்கிலப் பாடநெறி தகுதிகாண் பரீட்சைக்கு 15 பேர் தெரிவாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆங்கிலப் பாடநெறியைப் பயிலுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண பரீட்சை ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு சம்பந்தப்பட்டகல்வியியற்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட 15 பேரின் பெயர் விபரங்களும் வருமாறு;

என். ஜெயராஜ் உரும்பிராய் தெற்கு, ரி. கிங்ஸ்லி அடம்பன், ஆர். சசிலா மல்லாவி, எஸ். நிகேதினி துனுக்காய், பி. பாலமதி கண்டி வீதி, வவுனியா, ரி. வினோதினி புலோலி தெற்கு, ரி. சிவதர்ஷினி சாவகச்சேரி, ஜி. காயத்திரி மானிப்பாய், ரி. விஜயாகரன் உடையார்கட்டு, எச். எ. சலமன் பரிஸ் தாராபுரம் மன்னார், கே. சிறிமதிசமயபுரம், வவுனியா, எஸ். ஆரணி வட்டுக்கோட்டை, எஸ். ராஜினி முழங்காவில், எம். சர்மிலா தேவி குருமன்காடு, வவுனிய, பி. ஜசீலா கோண்டாவில், (உ-3)

## இறப்பர் தோட்டநிதி ஒதுக்கீடு மோசடி ஜனாதிபதியிடம் தகவல் பெற

# குற்றப்புலனாய்வுப் பிரிவு முடிவு

(கொழும்பு)

இறப்பர், தோட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக, முன்னாள் நிதியமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கவிடம் இருந்தும் தகவல்கள் பெறப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதியிடம் இருந்து தகவல்களை பெற்றுக் கொள்வது தொடர்பான நீதிமன்ற உத்தரவு பெற்றுக் கொண்ட பின்னரே விசாரணைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக குற்றப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன்கிரியல்ல வினால் வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இறப்பர் தோட்ட உற்பத்திக்கு எவ்வித ஆவணங்களோ அன்றிபதிவேடுகளோ இன்றி சுமார் 97 கோடி ரூபா நிதியினை பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒதுக்கீடு செய்தது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இது குறித்து முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் ரி. வி. ஜெயசுந்தராவையும் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை முன்னாள் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரும், பிரதமருமாகிய ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்கு அறிவிக்காமலே ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார் என தகவல் அறிவித்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## விடுதலையாகும் படையினர் பிரதமரைச் சந்திப்பர்

(கொழும்பு)

இன்று சனிக்கிழமை காலை விடுதலைப் புலிகளினால் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து விடுவிக்கப்படவுள்ள 7 இராணுவத்தினரும் பி. ப 4.00 மணிக்கு பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவை சந்தித்துப் பேசவுள்ளனர்.

அலரிமாளிகையில் இடம் பெறவுள்ள இச் சந்திப்பிற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் பொலிஸார் படுகாயம்

துப்பாக்கியைமடியில்வைத்து துப்புரவு செய்துகொண்டிருந்த வேளை, அது தவறுதலாக வெடித்ததில் இடது கை மூட்டில் துப்பாக்கிச் சன்ன காயங்கள் ஏற்பட்ட நிலையில் பொலிஸார் ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற இந்தச் சம்வத்தில் அங்குகடமையாற்றும் ஏ. எச். சம்பத்குமார் (வயது-27) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (உ-6)

## செய்தித் துளிகள்

### மாரடைப்பினால் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை மாரடைப்பு ஏற்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

காக்கைதீவைச்சேர்ந்த சீனியர் குணசேகரம் (வயது 47) என்பவரேஉயிரிழந்தவராவர்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை இரத்தவாந்தி எடுத்ததாகவும், உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரும் வழியில் பிரஸ்தாபநபர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

### புதிய நிர்வாகிகள்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக யோ. றெனிக்கல், உபதலைவராக நா. ரஜான், செயலாளராக தே. அஜித்வின்சலோ, உப செயலாளராக அ. றதீஸ், பொருளாளராக சி. சிறிசுதாசரன், விளையாட்டுப்பொறுப்பாளராக ச. கண்ணன் நிலையப் பொறுப்பாளராக ந ஆனந்தராஜா ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக தேவதாஸ், செல்வரெட்ணம் டேவிட்பட்டு, தர்மரெட்ணம் நாகமுத்து, பாலச்சந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-59)

### படையினர் உதவியுடன் தங்க நகைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வறுத்தலை விளான் என்ற முகவரியில் வசித்து தற்போது கோண்டாவில் மேற்கு பகுதியில் வசித்து வரும் பீ பகிரதன் என்பவர் கடந்த 22 ஆம் திகதி 515வது படையணித் தலைமையகத்திற்குச் சென்று தனது வீட்டில மறைத்து வைத்திருக்கும் உடைமைகளை மீட்டுத்தரும்படி கோரியதற்கமைய 515வது படையணித் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியின் மேற்பார்வையில் அவரதுவீட்டில் மறைத்து வைக்கபபட்டிருந்த 50 பவுண் தங்க நகைகள் மீட்டுக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கைகள் தலைமையகம் விடுத்துள்ள விசேட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆபரணங்களில் தாலிக் கொடி 02, வளையல் 16, மாலை 03, பென்ரன் 02 நெக்லஸ் 01, தாயத்து 01, மோதிரம் 03, தோடு 04சோடி என்பன அடங்கும். (உ)

### சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்நடத்தும் லீக்சுற்று போட்டியில் நாளைமறுதினம் பி.ப 4 00 மணிக்கு வளர்பதி வி.க எதிர் பாடும் மீன் 'பி' வி.க, பி.ப 5 15 மணிக்கு எவறஸ்ட் வி.க எதிர் பொற்பதி 'பி' வி.க ஆகியன பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

### செலவு குறைப்பு

(கொழும்பு)

அடுத்தமாதம் 6 ஆம் திகதி ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவுசெலவுத் திட்டத்தில் செலவு 36 5 பில்லியன் ரூபாவாக குறையவுள்ளதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்செலவு கடந்த வரவு செலவுத் திட்டத்தில் 51பில்லியன் ரூபாவாக இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### கேணல் சங்கருக்கு வவுனியாவில் அஞ்சலி

(வவுனியா)

தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரனின்நெருங்கிய சகாவான கேணல் சங்கரின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி நேற்று முன்தினம் வவுனியாவில அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 20 வருடங்களாக தேசியத் தலைவரின நம்பிக்கைக்குரிய நெருங்கிய சகாவாக இருந்த இவர், நோர்வேயின் சிறபபுத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வன்னிசென்று பிரபாகரனைச் சந்தித்த போது அங்கும் உடன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### விசேட கூட்டம

(யாழ்ப்பாணம்)

சமாதானத்திற்கான மக்களின் விஞ்ஞாபனம் தொடர்பாக தேசிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான ஆலோசனைகளைப் பரிமாறும் விசேட கூட்டமொன்று இன்று பிற்பகல் 4-00 மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை கலந்துகொண்டு ஆலோசனை வழங்குமாறு யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு பரமநாதன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (இ)

## இந்தியா ஊடாக யாலா பயணம்!
## மத்திய அரசின்அனுமதியை நோர்வே கோரவில்லை
### இந்திய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தியா ஊடாக தாய்லாந்து செல்வதற்கான மத்திய அரசின் அனுமதியை நோர்வே கோரவில்லையென இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியா ஊடாக தாய்லாந்திற்குப் பயணம் மேற்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கைவிடுத்தால் அதற்கு அனுமதி வழங்கப்படக்கூடாதென இந்தியமத்திய அரசிடம் ஜனதாக்கட்சித் தலைவர்சுப்பிரமணிய சுவாமி தெரிவித்திருக்கின்றமை குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (உ-8)

## 20 ஆண்டுகளின்பின் இரவுநேர பஸ்சேவை

(கொழும்பு)

வவுனியாவில் இருபது வருடங்களுக்கு பின்னர் இரவு நேர பஸ்சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில் நான்குபாதைகளில் மாத்திரம் இரவுநேர பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலக்கிரமத்தில் ஏனைய பாதைகளுக்கும் விஸ்தரிக்கப்படும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## பாதுகாப்பு நிதி பெருமளவில் குறைப்பு

(கொழும்பு)

தாய்லாந்தின் பேச்சுக்கள் பெரும் நம்பிக்கை யளித்துள்ளதையடுத்து 2003 ஆம் ஆண்டுக்கானவரவு செலவு திட்டத்தில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் தொகை கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மூன்றில ஒன்று குறைக்கப்பட்டுள்ளது.

கடந்தஆண்டில் பாதுகாப்பு செலவினமாக 51 பில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இவ்வாண்டு 35.6 பில்லியனே ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த புதன்கிழமை இரவு அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதிநிதியமைச்சர் பந்துல குணவர்த்தன அடுத்த ஆண்டிற்கான மதிப்பீடுகளை சமர்ப்பித்திருந்தார். நிதியமைச்சர் கே. என். சொக்ஸி வெளிநாடு சென்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மதிப்பீட்டின் மொத்தசெலவினம் 6506 பில்லியனும்எதிர்பார்க்கப்படும் வருமானம்278 பில்லியனுமாகும். எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுக்கடன் 349 பில்லியன் ரூபாவும் செலுத்த வேண்டிய இவ்வாண்டுக்குரிய கடன்தவணைப்பணம் 197 பில்லியன் ரூபாவும் வட்டி 130 பில்லியன் ரூபாவும் வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை135 பில்லியன் ரூபாவும் என மதிப்பிடப்பட்டுள்ளது

ஏனையஒதுக்கீடுகளில் மனியம் வழங்குவதற்கு 116,650 மில்லியனும் ஒய்வூதியத்திற்கு 33,500 மில்லியனும் ஊனமுற்ற படைவீரர் கொடுப்பனவு 3,400 மில்லியனும் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்க்கான நிவாரணமாக, 2300 மில்லியனும் சமுர்த்தித்திட்டத்திற்கு 9000 மில்லியனும்மாணவர் சீருடை 6000 மில்லியனும் ஒதுக்கப்படவுள்ளது. (உ)

## 20 பேர் மக்கள் வங்கி பதவிநிலை உதவியாளர் பயிலுநர்களாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 'வங்கி உதவி பயிலுநர்' (தமிழ் பேசும் பிரதேசங்களுக்கான) பதவிநிலை உதவியாளர் பயிலுநர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு இல 38, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்த கொழும்பு 10 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி பணியாளர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களை குறித்த நேரத்தில் பணியாளர் பயிற்சிக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ் பிரதேச முகாமையாளர் கேட்டுள்ளார்:

மேற்படி நியமனம் பெறவுள்ளோர் விபரம்.

பி. முருகதாஸ்- கொக்குவில், செல்வி எம் சதாசிவ சர்மா – மட்டுவில், செல்வி எம். எஸ் யோகேந்திரன் - கோவில் வீதி, யாழ்ப்பாணம், செல்வி எவ். ஜென்சி -வவுனியா, செல்வி என். அருணகிரிராஜா - கொழும்பு எஸ். எல். ஆர். நீகன்துறம்- மன்னார், செல்வி சற். கணேஸ்வரன் - யாழ்ப்பாணம், செல்வி பி. மனோஜா - கரவெட்டி, செல்வி எஸ். சிவராஜா- கொழும்பு, எஸ். எஸ். பகீ, தரன் - யாழ்ப்பாணம், செல்வி வி. ஜெயக்குமார்- சாவகச்சேரி, என். தனேஷ்- யாழ்ப்பாணம், செல்வி கே. தமயந்தி - வவுனியா, பி.சீராளன் –யாழ்ப்பாணம், எஸ். கோகுலகாந் - யாழ்ப்பாணம், செல்வி எம். சிறீதரன் - யாழ்ப்பாணம, ரி.பாரதரமணா - வவுனியா, செல்வி எஸ் தர்சினி - வவுனியா, செல்வி எஸ். எக்ஸ். ஜெயச்சந்திரா - யாழ்ப்பாணம், ஜே எம். சசிநாத்- வவுனியா. (உ-3)

## நல்லூர் ஆலயத்தில் தொலைத்த பொருட்களை ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தின் போது கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் சில நல்லூர் பிரதேச செயலகத்தில் உள்ளதாகவும் அவற்றை உரியவர்கள் ஆதாரத்தினைக் காண்பித்து பெற்றுக் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

- ஒரு தொகைப் பணத்துடன் பேஸ், அடையாள அட்டையும் தே.அ.அ.இல. 495804151 வி -பரமேஸ்வரி இரத்தினசிங்கம் பிள்ளையார் கோவிலடி, களபூமி, காரை நகர்.
- அடையாள அட்டையுடன் ஒரு பேர்ஸ் தே.அ.அ இல. 505940741 வி, விசேடஅ.அ. இல. 091024310 -இரத்தினேஸ்வரன் விஜயராணி கச்சாய் வீதி, கொடிகாமம்.
- ஆண்களுக்கான கைக்கடிகாரங்கள்-02 (இரண்டு)
- பெண்களுக்கான கைக்கடிகாரங்கள் - 01 (ஒன்று) ஆகியவற்றையே ஆதாரத்துடன் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினங்கள் – 2002

## யாழ். மாவட்டம்

போலியோ நோயை முற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்கும் நோக்குடன் கடந்த ஏழு வருடமாக போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வடகிழக்கு மாகாணங்களில் கீழ் குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.

1. காலத்திற்குக் காலம் மக்கள் இடம் பெயர்வதால் பிள்ளைகளைத்தேடிகண்டுபிடித்து மருந்து கொடுப்பதில் உள்ள சிரமம்.
2. இடம் பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்ற படியபால் சுகாதாரத்தை பேணுவது குறைவாக காணப்படுகின்றது.

இக் காரணங்களால் வட, கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாம் என ஐயப்பாடு உண்டு. எனவே இவ்வருடமும் செப்டெம்பர் 28ம் திகதியும். ஒக்டேபர் 26ம் திகதியும் இருதடவைகள் (05) ஐந்து வயதிற்குட்பட்ட சகலபிள்ளைகளுக்கும் போலியோ மருந்து கொடுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ் குறிப்பிட்ட நிலையங்களில் போலியோ தடை மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். மாகாண பிரதிப்பணிப்பாளர் சுகாதாரசேவைகள் மேற்கொண்டுள்ளார். இந்நிலையங்களில் காலை 8மணி முதல் மாலை 4மணிவரை தடைமருந்து வழங்கப்படும். 5வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பலதடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் இது கட்டாயமாக கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்கு தடைமருந்து கொடுப்பதன் மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது எம் நாட்டில் இருந்தே முற்றாக இந்நோயை ஒழித்து விடமுடியும்.

### சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியான சிகிச்சா நிலையங்களின் பெயர் பட்டியல் கீழேதரப்படுகின்றது.

### தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

1. மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை
2. சித்தியம்புளியடி சனசமூகநிலையம்
3. பன்னாலை சிகிச்சாநிலையம்
4. குட்டியப்புலம் பாலர்பாடசாலை
5. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மல்லாகம்
6. ஆரம்ப சுகாதார நிலையம் குளமங்கால்
7. சிகிச்சாநிலையம் கல்லாரை
8. ஆரம்ப சுகாதார நிலையம் சீனன்கலட்டி
9. கும்பளை சனசமூகநிலையம்
10. கலைநகர் சனசமூகநிலையம்
11. கிராமசேவையாளர் அலுவலகம் அளவெட்டி மேற்கு
12. மத்திய மருந்தகமும் மகப்பேற்றுமனை அளவெட்டி
13. புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம்
14. ஆரம்ப சுகாதார நிலையம் ஈவினை
15. மத்திய மருந்தகம் ஏழாலை
16. கிராமோதய நிலையம் ஏழாலை
17. மாதர் சங்கம் ஏழாலை
18. மயிலங்காடு பாலர்பாடசாலை
19. மத்திய மருந்தகம் சுன்னாகம்
20. பொது நூலகம் சுன்னாகம்
21. ஐயனார் சனசமூகநிலையம் சுன்னாகம்
22. சுப்பிரமணியம் சனசமூகநிலையம் சுன்னாகம்
23. மத்திய மருந்தகம் உடுவில்
24. உடுவில் வடக்கு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் அலுவலகம்
25. இந்து இளைஞர் மன்றம் பாலர்பாடசாலை உடுவில்வடக்கு
26. மல்வம் சேச்
27. ஆரம்ப சுகாதார நிலையம் சங்குவேலி
28. அந்திரான் மாதா கோவிலடி
29. அண்ணா வாசிகசாலை உடுவில் தெற்கு
30. கத்தர் கோவிலடி உடுவில் தெற்கு
31. மத்திய மருந்தகம் இணுவில்
32. இணுவில் மத்திய கல்லூரி
33. இராமநாதன் கல்லூரி
34. கலாஜோதி சனசமூகநிலையம்
35. ஆரம்ப சுகாதார நிலையம் தாவடி
36. பாலர்பாடசாலை காளிகோவிலடி

### கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

1. இடைக்காடு ஆர்.டி.எஸ் சுகாதாரசேவைகள் பணிமனை
2. அச்சுவேலி
3. சூசையப்பர் கோவிலடி அச்சுவேலி
4. ம.ம புத்தூர்
5. ஆவரங்கால் மத்தி வடக்கு
6. வி.சி புத்தூர்
7. பி.எச்.சி, வாதரவத்தை
8. ஆர்.டி.எஸ், சிறுப்பிட்டி
9. ஆர்.டி.எஸ், அச்செழு
10. ஆர்.டி.எஸ், நீர்வேலி
11. ஆர்.டி.எஸ், ஊரெழு
12. உரும்பிராய் ஆரம்பபாடசாலை
13. உரும்பிராய் சைவத்தமிழ் பாடசாலை
14. சு.வை.அ. பணிமனை கோப்பாய்
15. செபமாலைமாதா கோவிலடி இருபாலை
16. ஆர்.டிஎஸ் கட்டப்பிராய்
17. கல்வியங்காடு சைவப் பாடசாலை
18. திருநெல்வேலி, கலாமன்றம்
19. திருநெல்வேலி கீ.சீ காளிகோவிலடி
20. ம.ம, கொக்குவில்
21. ம.ம.ம.ம, கோண்டாவில்
22. சிகிச்சாநிலையம் கோண்டாவில்
23. ஆர்.டி.எஸ், கொக்குவில்
24. உரும்பிராய் கிழக்கு வாசிகசாலை

### சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

1. C.D மிருசுவில்
2. V.C கச்சாய்
3. கெற்பேலி
4. கச்சாய் அம்மன்
5. விடத்தற்பளை
6. மீசாலை கிழக்கு மீசாலை வடக்கு
7. D.H சாவகச்சேரி
8. மந்துவில்
9. மட்டுவில் வளர்மதி
10. மட்டுவில் வடக்கு
11. கைதடி வடக்கு
12. C.D கைதடி
13. கைதடி தச்சன்தோப்பு V.C
14. கல்வயல்
15. சரசாலை
16. C.D.M.S வரணி
17. வரணி நாவற்காடு
18. முகமாலை

### யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

1. சுவாமியார் வீதி சிகிச்சா நிலையம்
2. சிறுவர் பூங்கா சிறுவர் பாடசாலை (பாஷையூர்)
3. திருநகர் சனசமூகநிலையம்
4. குருநகர் சிகிச்சா நிலையம்
5. ஆவே மரியா பாலர்பாடசாலை
6. யூபிலி மகப்பேற்று நிலையம்
7. யூபிலி மகப்பேற்று நிலையம்
8. ஆயுள்வேதக் கல்லூரி
9. போதனா வைத்தியசாலை
10. கொட்டடி பாலர்பாடசாலை
11. நாவலர் சிகிச்சாநிலையம்
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக் பாடசாலை
13. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை (கண்டிவீதி)
14. அரியாலை மகப்பேற்று நிலையம்
15. ஞானக்குழந்தை பாலர்பாடசாலை (சிவப்பிரகாசம் றோட்)
16. ஜங்கர்பாமஸி முன் (ரவி வீடு)
17. கந்தர்மடம் சிகிச்சாநிலையம்
18. செட்டித்தெரு சனசமூகநிலையம்
19. நல்லூர் சிகிச்சாநிலையம்
20. மூத்தவிநாயகர் சனசமூகநிலையம் (நல்லூர்)
21. வண்ணார் பண்ணை சிகிச்சாநிலையம்
22. ஞானக்குழந்தை பாலர்பாடசாலை (இராமநாதன்வீதி)

### மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

1. பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலை
2. சில்லாலை கிராம அபிவிருத்திச்சங்கம்
3. மாதகல் பிள்ளையார் கோவிலடி
4. இளவாலை மத்திய மருந்தகம்
5. சங்கானை சுற்றியற் கூறு (PU)
6. சு.வை.அ பணிமனை மானிப்பாய்
7. தொல்புரம் மத்திய மருந்தகம்
8. மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை
9. வட்டு தெற்கு திருஞானசம்பந்தர் பாடசாலை
10. சங்கரத்தை மாதர் சங்கம்
11. ஆனைக்கோட்டை ஆரம்ப சுகாதாரநிலையம்
12. சண்டிலிப்பாய் (ஆலாங்குளய் சனசமூகநிலையம்)
13. நவாலி Y.M.C.A
14. வட்டு மத்திய மருந்தகம்
15. பண்ணாகம் ஆரம்ப சுகாதார நிலையம்
16. சுழிபுரம் மாதர் சங்கம்
17. மானிப்பாய் லயன்ஸ் கழகம்
18. சுதுமலை குண்டடி வாசிகசாலை
19. சாவற்கட்டு ஆரம்பசுகாதார நிலையம்
20. அராலி சரஸ்வதி வித்தியாசாலை
21. அராலி இந்துக்கல்லூரி
22. வட்டு (R.H) (கிராமிய வைத்தியசாலை)

### பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

1. சோளங்கன் ச.ச நிலையம்
2. மணியகாரன் தோட்டம் ச.ச நிலையம்
3. விக்னேஸ்வரா சி.நிலையம்
4. கப்புதூ சி.நிலையம்
5. இராஜகிராமம் ச.ச.நி கரவெட்டி
6. C.D.M.H கரவெட்டி
7. கவுந்தில் வாசிகசாலை கிழவிதோட்டம்
8. கோவிற்கடவை ச.ச நிலையம்
9. கட்டைவேலி சி.நிலையம்
10. உடுப்பிட்டி V.C சி.நிலையம்
11. உடுப்பிட்டி ச.ச.நிலையம்
12. இலகடி ச.ச.நிலையம்
13. இமையாணன் மாதர்சங்கம்
14. கலைமகள் பாலர்பாடசாலை
15. இலந்தைக்காட்டு வாசிகசாலை
16. வதிரி சி.நிலையம்
17. அல்வாய் தெற்கு V.C சி.நிலையம்
18. விநாயகர் பாலர்பாடசாலை
19. ஆதார வைத்தியசாலை
20. வல்லிபுரக் குறிச்சி G.S Offices
21. நாலாங் குறுக்குத்தெரு சிகிச்சா நிலையம்
22. CD பருத்தித்துறை
23. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை ச.ச நிலையம்
24. மாதனை மாதர் சங்கம்
25. கற்கோவளம் சி நிலையம்
26. திக்கம் சி நிலையம்
27. வியாபாரி மூலை சி நிலையம்
28. அம்பிகை பாலர் பாடசாலை
29. வளர்மதி பாலர் பாடசாலை
30. கொற்றாவத்தை அ.க.த பாடசாலை
31. கொற்றாவத்தை இ.த.க பாடசாலை(பலாலி)
32. VVT வைத்தியசாலை
33. பாரதி ச நிலையம்
34. ஆதி கோவிலடி வாசிகசாலை
35. அ.மி.த.க. பாடசாலை வல்வெட்டி
36. கொற்றாவத்தை பாடசாலை
37. மணற்காடு பாலர் பாடசாலை
38. குடத்தனை மேற்கு சி நிலையம்
39. குடத்தனை மேற்கு வாசிகசாலை
40. பொற்பதி வாசிகசாலை
41. அம்பன் அ.மி.த.க பாடசாலை
42. குடத்தனை வடக்கு வாசிகசாலை
43. மருதங்கேணி நடமாடும் வைத்தியசாலை
44. செம்பியன் பற்று CHURCH
45. ஆழியவளை பாடசாலை
46. வெற்றிலைக்கேணி GS offices
47. உடுத்துறை GS offices
48. முள்ளியான் சந்திக் கட்டடம்
49. வல்லிபுரக் கோவில்

### ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

1. காரைநகர் அரச வைத்தியசாலை
2. காரைநகர் வாரிவளவு பாலர் பாடசாலை
3. களபூமி கிராம சேவையாளர் அலுவலகம்
4. ஊர்காவற்றுறை அரச வைத்தியசாலை
5. தம்பாட்டி சனசமூகநிலையம்
6. நாரந்தனை ஆரம்ப சுகாதார நிலையம்
7. புளியங்கூடல் ஆரம்ப சுகாதார நிலையம்
8. மெலிஞ்சி முனை பாடசாலை
9. அனலை தீவு அரச வைத்தியசாலை
10. எழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையம்
11. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
12. மண்டைதீவு
13. வேலணை அரச வைத்தியசாலை
14. புங்குடுதீவு அரச வைத்தியசாலை
15. நயினாதீவு அரச வைத்தியசாலை
16. நெடுந்தீவு அரச வைத்தியசாலை
17. நெடுந்தீவு மேற்கு ச ச நிலையம்
18. நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம்

[C-5039]

# நீடித்தசமாதானத்தை அடையசர்வமத தலைவர்களும் ஒன்றுபடவேண்டும்

## சர்வமத ஒன்றிணைப்பு மாநாட்டில் வலியுறுத்து

(கொழும்பு)

சமாதானத்திற்கான சர்வமத ஒன்றிணைப்பின் மாநாடு கடந்த 25ஆம்திகதிகொழும்பு இலங்கைமன்றக் கல்லூரியில் நடைபெற்றபோது நீடித்த சமாதானத்தை அடைவதற்கு அரசியல்வாதிகள் மட்டுமல்ல சமயத்தலைவர்களும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் எனவலியுறுத்தப்பட்டதுடன் 'சமயங்கள் மூலமாக சமாதானத்தை நாடுவோம்' எனும் தொனிப் பொருளில் கருத்துகள் முன் வைக்கப்பட்டன.

பௌத்த இந்து,இஸ் லாம் சமயங்களின் தலைவர்களும் மற்றும் சமயப்பிரமுகர்களும் கலந்து கொண்ட மேற்படி மாநாட்டில் நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தும்கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அங்குஉரையாற்றியமடுவில் வேவ சோடிததேரர்,

ஐ.தே.க.ஆட்சி அமைத்தால் அந்தக்கட்சியின் ஆதரவாளர்கள் நன்மை பெறுகின்றனர். பொ.ஐ.மு.ஆட்சி அமைத்தாலும்அவ்வாறுதான் இடம்பெறுகின்றது.

ஆனால் இந்த இரு கட்சிகளும் ஆட்சியமைக்கும் சந்தர்ப்பங்களில் நன்மை பெறாதமக்களின் நிலைஎன்ன? அதனை அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்கின்றார்களா?

வாய்ப்புக்களும் வசதிகளும் கிடைக்கப்பெறாத மக்கள் தான் ஆத்திரப்பட்டு வன்முறையில் ஈடுபடுகின்றார்கள்.

தமிழீழம் கேட்ட புலிகள் இன்று பேச்சு வார்த்தைக்கு வந்திருக்கிறார்கள் இடைக்காலநிர்வாகம்ஒன்றை அமைக்கப் போவதாக அரசாங்கமும் கூறுகின்றது.

யுத்தநிறுத்தம் இடைக்கால நிர்வாகம் போன்ற தற்காலிகத் தீர்வுமுறைகள் நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்காது.

பிரச்சினைகள் இல்லாத அச்சம் பீதிஇல்லாத நிலை வேண்டும் அரசியல் வாதிகள் மட்டும் பிரச்சினையைதீர்த்து விட முடியாது. சமயத்தலைவர்களின் பங்கும் அவசியமானது யுத்தம் வேண்டும் என்று ஒருபோதும் நாம் கூற மாட்டோம் என்றார்.

(உ-7)

## விளையாட்டுப் போட்டி

(சுதுமலை)

சுதுமலை வடக்கு நாமகள் சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப3 மணிக்கு தலைவர் க.அ அரசரத்தினம்தலைமையில் யா/சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வோதயத்தின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ் வி. சங்கரப்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக யா/சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலய அதிபர் ஆர். சண்முக சுந்தரமூர்த்தியும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. சந்தசாமியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-252)

## சைக்கிள் திருட்டு

(மந்திகை)

வீட்டில் பூட்டிவைக்கப்பட்டிருந்த பெறுமதிவாய்ந்த துவிச்சக்கரவண்டி இரவு நேரத்தில் திருட்டுப் போயுள்ளது

புலோலி தெற்கைச் சேர்ந்த தெ.சஞ்சீவன் என்பவருக்குச் சொந்தமான சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

(உ-23)

## கருத்தரங்கு

(மந்திகை)

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கானகருத்தரங்கும் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் திரை நீக்கமும் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சுவாமி சித்ரூபானந்தா ''சுவாமி விவேகானந்தரின் ஆளுமை'' என்ற தலைப்பில் விஷேட சொற்பொழிவாற்றவுள்ளார்.

(உ-23)

## இசை ஆராதனை

(மந்திகை)

இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில், மலர்ந்து வரும் சமாதானச் சூழ்நிலை என்றும் நிலைக்க இறை ஆசி வேண்டி ''தெய்வீக வாத்திய இசை ஆராதனை'' நாளை மாலை 6 மணிக்கு ஏழாலை சைவச் சிறார் இல்லத்தில் இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது.

(உ-23)

# திக்கம் வடிசாலை நிர்வகிப்பு விவகாரம் பிரதமர் கவனத்திற்கு

(திருநெல்வேலி)

அடிமட்ட வாழ்வு வாழும் தொழிலாளர் வர்க்கமாகிய நாம், தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்பதற்குமுன்பாகவே,எமது சொத்தான திக்கம் வடிசாலையை,அதனை நிர்வகிக்கும் உரிமையை எமக்குப் பெற்றுத்தரும் வண்ணம் பிரதமராகிய தங்களை மீண்டும் மீண்டும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இவை தொடர்பாக தங்களின் மேலான ஒத்துழைப்பை நாம் ஒக்டோபர்15ஆம் திகதி வரை எதிர்பார்த்து நிற்கின்றோம் தங்களும் எமது நிலைமையைக் கவனத்தில் கொள்ளாவிட்டால் போராட்டத்தைத்தொடர்ச்சியாக நடத்துவதைத்தவிர வேறுவழியில்லை எனபதை கமனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வடமராட்சிபனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1982ம் ஆண்டு எமதுபாராளுமன்ற உறுப்பினர்களின் நிதிப்பங்களிபுடன் எமது நிறுவனங்களின் அங்கத்தவர்களான பனம் தொழில் வல்லுநர்களின் சமூகநலமேம்பாட்டினை கருத்தில் கொண்டே வடமராட்சியில் திக்கம் என்னுமிடத்தில் யாழ்.மா. கூட்டுறவு வடிசாலைச்சமாசம்'எனும் பெயருடன் திக்கம் வடிசாலை நிர்மாணிக்கப்பட்டது. இது ஒரு கூட்டுறவு சமாசமாகும்.

1987ம் ஆண்டுவடமராட்சியில் நடைபெற்றலிபரேசன் ஒப்பரேசன்நடவடிக்கையால் சேதமடைந்த இவ்வடிசாலை புனரமைப்புக்காகபனை அபிவிருத்திச் சபையிடம் 1990 இல ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 1992இல் மீளவும் வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் ஊடாக வடமராட்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி என்னும் எமது கூட்டுறவுநிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றிலிருந்து08 01.2002 வரையும் சிறப்பாக பல்வேறுபட்ட கஷ்டங்களின் மத்தியிலும் நிர்வகித்து வடிசாலையைச்சிறப்புடன் இயக்கி அங்கத்தவர்களுக்கு கூடுதலான வருமானத்தினை ஈட்டுவதற்கு வழி செய்தோம்.

குறித்த 08-01-2001 இல் பொதுசன ஐக்கிய முன்னணியின் அரசாங்கத்தின்கீழ் புனர்வாழ்வுதமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சினால் எம்மிடமிருந்து மிகுந்த பயமுறுத்தலுடன் எமது நிர்வாகிகளின் அங்கத்தவர்களின் சம்மதம் ஏதுமின்றி எம்மால் தேடிய ரூபா600 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் அனைத்தையும் பறித்தெடுத்து தமது அமைச்சின் கீழ் இயங்கிய பனை அபிவிருத்திச் சபையின் நிர்வகிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை.

(அ) 175 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்இருப்பிற்கான பணம் வழங்கப் படவில்லை.

(ஆ) எம்மால் வங்கியினில் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த கணக்குகள் முடக்கப்பட்டு இன்றுவரை அவற்றினை நாம் கையாள தடை விதிக்கப்பட்டமை

மேற்குறித்த நடவடிக்கையினால் எமது நிர்வகிப்புக் காலத்தில்கொள்வனவு செய்த உற்பத்திக்கான கொடுப்பனவுகள் வழங்காமையினால் அங்கத்தவர்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

இவ்வடிசாலையினை மீளவும் எம்மிடம் ஒப்படைப்பதற்காக உறுதியளித்து தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தெரியப்படுத்திய தங்களது தற்போதைய இந்துகலாசார அமைச்சர் அவர்களும் தற்போதைய பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் அவர்களும் குறித்த பதவிகளுக்கு வந்தபோது நாம் எமது கோரிக்கை நிறைவேறும் என எதிர்பார்த்தோம் இன்றுவரை நாம் பல கோரிக்கைகள் விடுத்தும் கூட அவர்கள்செவிசாய்க்கவில்லை. இதனாலேயே நாம் இன்று அடையாளப் போராட்டத்திற்காக அணி திரண்டுள்ளோம் என்றுள்ளது.

(உ-23,43)

# ராணுவ வாகனத்தில்இருந்த எரிபொருளை விற்ற சிப்பாய்கள் விடுவிப்பு

(மந்திகை)

ஓடிக்கொண்டிருந்த இராணுவ வாகனத்தை நிறுத்தி வாகனத்திலிருந்த எரிபொருளை விற்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரண்டு இராணுவச் சிப்பாய்களையும் சம்பந்தப்பட்ட வர்த்தகரையும் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இராணுவப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பி. டபி யு. மென்டீஸ், பி.எம்.ஜெயதிலக டண்டா ஆகிய இரு இராணுவ சிப்பாய்களும், கொள்வனவு செய்த ச.இராசேஸ்வரன் என்ற வர்த்தகருமே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மூவரும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட வேளை, தலா 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

(உ-23)

# புலிகளின் பெயரைக் கூறி வாகனம் கடத்தியோர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கூறிக் கொண்டு கல்முனை பிரதேசத்தை சேர்ந்த வைத்தியர் ஒருவரிடம் இருந்து ஜெற்ரக வாகனத்தை கடத்திச்சென்ற இருவரை கல்முனை பொலிஸார் நேற்று முன்தினம்கைது செய்துள்ளனர்.

கல்முனை சாய்ந்த மருதுப் பிரதேசத்தில் மோட்டார் வண்டியில் பயணம் செய்த இவர்கள் அரசுக்கு சொந்தமான ஜெற் வாகனத்தை கடத்திச்சென்றுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும்,கைது செய்ய முற்படுகையில் இவர்களுடன் ஏற்பட்ட சிறு மோதல் காரணமாக காயம் ஏற்பட்டதால் தற்போது கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

(உ-8)

# அமைச்சரவை முடிவை எதிர்த்து வழக்குத் தொடர முடியாது

## பிரதம நீதியரசர் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், இடைக்கால நிர்வாகத்தின் போது வழங்கப்பட்ட நியமனங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அறிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் பகுதி நேர அறிவிப்பாளரான பெண்மணி ஒருவர் சமர்ப்பித்திருந்த மனு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிரதமர் நீதியரசர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இத்தகைய நியமனங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்படவேண்டும் என அமைச்சரவை முடிவு செய்திருந்தது. எனவே, இம் முடிவினை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத் தொடர்வது பயனற்ற முயற்சியெனவும் குறிப்பிட்டார்.

இருந்தபோதிலும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பகுதிநேர ஒலிபரப்பாளருக்கு ஒரு வகையில் நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன், அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதென உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.(உ-8)

# மக்கள் பங்களிப்புடன் மறவர்குளம் புனரமைப்பு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியில் அமைந்துள்ள மறவர்குளம்,சனசமூகநிலைய நிர்வாகிகள், இளைஞர்கள் பொதுமக்கள் ஆகியோரின் ஒன்றிணைந்த பங்களிப்புடன் ஆழமாக்கப்பட்டுவருகின்றது.

இக்குளம் கடும் வரட்சியினால் முற்றாக காய்ந்து நீரற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால்இதனை அண்டியுள்ள பிரதேசங்களின் கிணறுகளும் நீர்மட்டம் குறைந்துள்ளன.

எதிர்வரும் பருவகால மழைநீரை அதிகளவில் தேங்கும் நோக்கில் இக்குளம் ஆழமாக்கப்பட்டுவருகின்றது.

தற்போதைய வரட்சியினால் யாழ். குடாநாட்டில் அனேககுளங்கள் வற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-59)

தோன்றிற் புகளொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

குறள்

## வலம்புரி

### பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழா ஒக்டோபர் மாதம் 12ந் திகதி நடைபெறவுள்ளது. 2002ஆம் ஆண்டில் நடைபெறுகின்ற இரண்டாவது பட்டமளிப்பு விழா இதுவாகும்.

2002ஆம் ஆண்டின் முதலாவது பட்டமளிப்பு விழா மார்ச் மாதம் 16ந் திகதி நடைபெற்றது. தற்போது இரண்டாவது பட்டமளிப்பு விழா ஒக்டோபர் 12ந் திகதி நடைபெறவுள்ளது.

ஒரு வருடத்தில் இரு தடவைகள் பட்டமளிப்பு விழா நடத்துவதென்பது சுலபமான காரியமன்று. இதைச் சுருங்கக்கூறின் சர்வதேசப் பல்கலைக் கழகங்களில் நடைபெறுகின்ற ஓர் முன்னேற்றகரமான செயற்பாட்டை நோக்கி யாழ்ப்பாணப் பலகலைக்கழகம தனது பயணததை முன்னெடுத்துள்ளதெனலாம்.

இத்தகைய நிலைமை தென்னிலங்கைப பல்கலைக்கழகங்களில் கூட காணமுடியாததொன்றாகும்.

ஓர் வருடத்தில் இரு தடவைகள பட்டமளிப்பு வழாவை நடத்தும் நிகழ்வை வெறும் கண கொண்டு பார்த்தால் அதறகுள் இருககின்ற அாப்பணிப்புக்களும் கடமையுணர்வுகளும வெளிப்படுவதற்கு இடமில்லாது போகும.

பட்டமளிப்பு விழா விற்கு முன்னதாக நடத்தப்படுகின்ற பரீட்சைகள், அவற்றின் பெறுபேறுகளை விரைந்து வெளியிடுகின்ற பணிகள இதர செயற்பாடுகள்இங்குமிகப்பெரும் வேலைப் பளுவைக் கொண்டதாக இருக்கின்றது. எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இயக்கத்திற்கு ஆணிவேராக இருக்கின்றது ணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின அர்ப்பணிப்புடன்கூடிய தலைமைத்துவத்தின் கீழ் பீடாதிபதிகள,துறைத் தலைவர்கள விரிவுரையாளர்கள மற்றும் பதிவாளர் உள்ளிட்ட கல்விசாராப் பிரிவினர் ஆகியோரின் இன உணர்வுடன் கூடிய அர்ப்பணிப்பே இதற்கு அடிப்படைக் காரணம் எனலாம்.

இது விடயத்தில் தென்னிலங்கைபோன்றல்லாது யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கற்றலுக்கான செயலாக்கமும் குறிப்பிடத்தக்கதாகும.

# புராண படன ஆர்வலர்களுக்குப் பயன் தரும்

# கச்சியப்பசுவாமிகள்... சிவராத்திரி புராணம்

| | |
|---|---|
| நூல்:- | சச்சியப்ப சுவாமிகள் அருளிய சிவராத்திரி புராணம் |
| ஆசிரியர்:- | புலவர் ஸ்ரீ விசுவாம்பா, விசாலாட்சி மாதாஜி |
| பக்கம்:- | 76 |
| நூலின் விலை:- | ரூபா 125/- |

கச்சியப்ப சுவாமிகள் அருளிய சிவராத்திரிபுராணம் என்னும் நூற் பெயரை முகப்பில் பார்த்தவுடன் கந்தபுராணத்தோடும் சச்சியப்பசிவாச்சாரியாரோடும் நன்கு பழகிய வர்களுக்குத் திடீரென ஒரு மலராடிப்பு வரத்தான் செய்யும். கச்சியப்பர் கந்தபுராணம் பாடினார் சிவராத்திரி புராணம் கச்சியப்பர் பாடவில்லை முதல் அட்டையைப் புரட்டி உள்ளே பார்த்த போது தான் மலாரடிப்பு மாறும் அங்கே சிவராத்திரி புராணம் என்னும் வார்த்தைக்கு அருகில் 'அடிமுடி தேடுபடலம்' என்று அடைப்புக்குறியுள் காணப்படுகின்றது.

முடி தேடு படலத்தைத் தேர்ந்து எடுத்துள்ளார் புராணங்களை இளஞ் சந்ததியினர் திருக்கோவில்களில் பாட்டும் பயனுமாசப் படிப்பதில் ஆர்வத்தை ஊட்டும் வகையில் பாடல்களுக்கு போர் புலன் வேறுபாடின்றி சிவன் ராத்திரியில் பத்தி சிரத்தையோடு காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி கேட்டுப் புண்ணிய சீலர்களாகி இம்மைப் போகங்களை எளிதில் பெற்று இன்புற்று புவி புகழ்போற்ற வாழ்வதற்குப் புராணபடனத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு பாடங்கேட்பதற்கு ஆசான் இல்லையே என்னும் மனக்குறையை சிவராத்திரி புராணத்தை வெளியிட்டதன் மூலம் மாதாஜி மாற்றி விட்டார். மான சீக குருவாக வரித்துப் படிப்பவர் பயன்விரிப்போர்க்கு உள் நின்று உணர்த்து முகமாக அமைந்துள்ளது. அம்மையாருடைய புராண படனம்.

### புலமைக்குச்சான்று

வாசிப்பவர் வாசிக்க வேண்டிய பகுதிகளைப் பிரித்தும் பயன் உரைப்போர் சொல்லும் தன்மையாகவும் தெளிவாக வரைந்துள்ளமை புலவர் விலாட்சியின் புலமையைப் புலப்படுத்தப் போதிய சான்

## திறனாய்வுக் களம்

### சிவ. சண்முகவடிவேல்

புலவர் ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி கந்த புராணம் தக்க காண்டத்தில் உள்ள அடிமுடி தேடுபடலம் என்பதையே சிவராத்திரி புராணம் என்று மகுடமிட்டுள்ளார்.

### அடிமுடிதேடு படலம்

10345 பாடல்களை கொண்ட கந்தபுராணத்தில் 99 பாடல்களைக் கொண்டது அடிமுடி தேடுபடலம்,

மாதாஜி அம்மையார் சைவ இளஞ் சந்ததியினரையும் மாணவர்களையும் கருத்திற் கொண்டு சிவராத்திரி புராணம் என்னும் அடி உரையாத்துள்ளார். விசாலாட்சி அமமையார்.

அடிமுடி தேடுதல் படிக்கப் படிக்க மேலும் ஆர்வத்தைத் தூண்டும் படலம்.

புராணத்திற்குப் புராணமாகவும் கதைக்குக் கதையாகவும் கற்பனைக்குக் கற்பனையாகவும், கருத்தாழத்திற்குக் கருத்தாழமாகவும தத்துவத்திற்குத் தததுவமாகவும், கவிதைக்கு இலக்கியச் சுவையாகவும் பத்திக்கு சிவபிரானிடத்தில் அயரா அன்பினை அள்ளிச் சொரிவதாகவும்,சிவவிரதங்களில் அதிஉத்தம சிவராத்திரிமேன்மையை விரிப்பதாகவும்,சிவவிரத்தை அனுட்டிப் பொருத்தமாவது 'அடிமுடி' தேடுபடலம்.

### புராணபடனம்

இளைய தலைமுறையினராகும் சைவச்சிறார் முதல் முதுபெரும் சைவப்பழங்களாகிய பெரியோர் வரை ஓதுவதற்கும் ஓதுவதனாலாய பயனை உதவுவதற்கும் உரியது சிவராத்திரிப் புராணம் என்னும் 'அடிமுடிதேடுபடலம்' என்பதை நன்கு கருத்திற் கொண்டுள்ள ர்!மாதாஜி. அவர்மனத்தில் திருவருள வசத்தால் உருப்பெற்ற இச்சாதனை வரவேற்கத் தக்கது. போற்றற்குரியது. உலகம் ஆதரிக்கற்பாலது.

றாகும்'அவர் நற்பணி மேன் மேலும் வளர எல்லாம்வல்ல, 'மைக்களமும் மான்மழுவும் வரதமுடன்அபயமுறும்மெய்க்கரமும் நாற்புயமும் விளங்கு பணிக் கொடும்பூணும் செக்கருறு மதிச்சடையும் சேயிழையோர் பாகமுமாய் முக்கணிறை' முன்னின்று அருள் புரிவான்.

கைக்கு அடக்கமாக நல்ல தாளில் கண்ணைக் கவரும் விதத்தில் வெளிவந்துள்ள இப்பனுவல், பலரும் படித்துப் பயனடையத்தக்கது.

ஹாட்லி அதிபர் தாக்கப்பட்டமைக்கு

## தென்மராட்சி அதிபர்கள் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஹாட்லிக்கல்லூரி அதிபர் மு ஸ்ரீபதிகடந்த 22ஆம் திகதி இனந்தெரியாத குபல் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டதற்கு தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்கள்சங்கம்தனது வன்மையான கண்டனத்தினை தெரிவித்துள்ளது.

கல்வியை மதிக்கின்ற எமது சமூகத்திற்கு இந்த சம்பவம வெட்கத்தையுமவேதனையையும் விரக்தியையும அளிப்பதாகின்றது.

இன்றைய சமாதானச் சூழலை குழப்புகின்ற ஒரு செயற்பாடாகவுமிது அமைகின்றது.

மேலும் இந்த நடவடிக்கை மனித அடிப்படைஉரிமையின் குரல்வளையை நெரிப்பதாகவும் கல்விச் செயற்பாடுகளை சீர்குலைப்பதாகவும் கல்விச் சமூகத்தின் சுயாதீனச் செயற்பாட்டைத் தடுபபதாகவுமைகின்றது. நெற்றிக் கண்ணை திறப்பினும் குற்றம் குற்றமே எனக்கூறும் நீதியுலகு வன்முறையாளர்களைக் கண்டு பிடித்துஉரியதீர்ப்பினைஅளித்திட வேண்டுமென எமதுசங்கமானது வலியுறுத்தி நிற்கிறது என்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

### தினசரி தியானம்

## காலம் மதிப்பற்றது

காலம் விலைமதிப்பற்றது. விரைந்தோடிக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஒவ்வொரு வினாடியும் முதுமை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் பிறந்த அதே வினாடி இறப்பும உடன் வந்து விடுகிறது. உயிர் அணுக்கள் வளர்கின்றன. அழிகின்றன. மீண்டும் இந்த மானிடப் பிறவியைப் பெற முடியாது. உங்களது வாழ்க்கையின் வெற்றி பெறும் மனிதராக இந்த வினாடியே புத்தரைப் போல வாருங்கள். உங்களது உற்ற சகோதரரான இறைவனின் அவா மிக்க பிரார்த்தனை இதுவே. பெருமையும் சிறப்பும் உங்களை வந்தடையட்டும்.

சுவாமி சிவானந்தர்

## சமாதான சகவாழ்வில் பிரச்சினை இல்லை

### ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான சகவாழ்வு நெருக்கடிக்குளளாகியிருப்பதை சீர் செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சித்து வருகிறார் என்றும, அமைச்சர் மிலிந்த மொறகொட ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகரை இது தொடர்பில சந்தித்து உரையாடவிருக்கிறாரென்றும் வெளிவந்த செய்திகள் தொடர்பாக ஜனாதிபதி பேச்சாளர் ஹரீம பீரிஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

சமாதான சகவாழ்வு பிரச்சினை என்று ஒன்று இல்லை. ஆனால், இறைமையுள்ள மக்களின் வாக்குரிமையூடாக வெளிப்படுத்தப்பட்ட மக்களின் விருப்பமும், இரண்டு மக்களாணைகளின் உடனொத்த செயற்பாடுமாகும்.

சமாதான சகவாழ்வில் அபிப்பிராயம், கொள்கைகளில் வேறுபாடுகள் ஏற்படலாம். ஆனால், இரு தரப்பினரும் இணைந்து செயற்படுவதை அவை தடை செய்யமாட்டா.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒருமித்துச் செயற்படுவதற்கு தடை இருக்காது. சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பத்திலிருந்தே சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ஆலோசனைகளையும், முன்னெச்சரிக்கைகள் கண்டிப்புகளையும் வழங்கி வந்துகொண்டிருக்கிறார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரமுள்ள ஒரு அரசுத்தலைவரின் தலையாய கடமை இதுவாகும. இவ்வாறு ஹரீம் பீரிஸ் இன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### நாளை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனக்கடனுதவி கூட்டுறவுச்சங்கப் பணிமனை திறப்புவிழா நாளை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் செ·விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினர்களாக யாழ்மாவட்ட சி.க.வ.கூ. சங்கசமாசத்தலைவர் ச.முருகனேசன் யாழ்மாவட்ட கூட்டுறவுச்சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி, யாழ்மாவட்ட கூட்டுறவுசபை செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் மற்றும் பல பிரமுகர்கள் சிறப்புவிருந்தினர்களாகவும் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்கிறார்கள். (வ)

ஐ.சி.சி.கிரிக்கெற் போட்டி

# இலங்கை அணியிடம் அவுஸ்ரேலியா தோற்றது

## இறுதியாட்டத்தில் இலங்கையும் இந்தியாவும் மோதும்

(கொழும்பு)

உலகக் கிண்ண சம்பியனான அவுஸ்ரேலிய அணியை 7 விக்கட்டுக்களால் வென்று இலங்கை அணி இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப போட்டியில் முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணியை 48.4 ஓவர்களில் 162 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்த இலங்கை அணி 40 ஓவர்களில் 3விக்கட்டுகளை மட்டும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

முதலில் களமிறங்கிய அவுஸரேலிய அணி மிக விறுவிறுப்பாக ஆடத்தொடங்கி 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கில்கிறிஸ் ஆட்டமிழந்ததைத் தெடாந்து அவுஸ்ரேலிய அணி சரிவைச்சந்தித்தது. இதில் ஷேன் வோர்ன் 36 ஓட்டங்களை பெற்றார். சுழல் பந்து வீச்சாளரான முரளிதரன் 26 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கட்டுக்களையும் தர்மசேன 2விக்கட்டுகளையும் வீழ்தினர்.

163 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணிவீரர் சனத் ஜெயசூரிய 51 பந்துகளில் 6பௌன்டரிகள் அடங்கலான 42 ஓட்டங்களைப் பெற்றார் அத்தப்பத்து 51 ஓட்டங்களையும், சங்கக்கார 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதில் மெத்ராட் 2விக்கட்டுக்களையும் வீழ்த்தினார் நேற்றைய ஆட்டத்தில் அரவிந்த டி சில்வா ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார். இதே வேளை ஐ.சி.சி போட்டியின் இறுதி ஆட்டத்தில் இலங்கையும் இந்தியாவும் மோதவுள்ளமை குறிபபிடத்தக்கது. (ந-5)

# சமாதானப் பேச்சுக்கள் நீண்டு சென்றால் பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு

## முன்னாள் அமைச்சர் கதிர்காமர் கருத்து

(கொழும்பு)

அரசு புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையின் பெறுபேற்றை அடுத்தவருட இறுதிக்குள் காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஸ்மன் கதிர்காமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுக்கொழும்பில் நடைபெற்ற மாநாட்டிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் .

இச்செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஆரம்பகட்டம் குறித்து ஜனாதிபதி பாராட்டு தெரிவித்துள்ளார் பொதுஜன ஐக்கிய முன்னணியும் அதனை வரவேற்றுள்ளது.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை காலவரையறையின்றி தொடர்ந்து செல்வதால் பல சிக்கல்கள் தோன்ற வாய்ப்புக்கள் உள்ளன இதனால் சமாதானப் பேச்சுவார்த்ததையை குறித்த கால எல்லைக்குள் நடத்தி முடிக்க வேண்டும்.

சமாதானப் பேச்சு வார்த்தை குறித்த இந்த விமர்சனங்களை பேச்சு வார்த்தைகளை குழப்புவதற்காக நான் கூறவில்லை. அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சரியானவை என்று இப்போது கூறமுடியாது.

இரு தரப்பினரும் தமது இறுதி நிலைப்பாட்டை தொளிவாக தெரிவிப்பதன் மூலமே மக்கள் மத்தியில் உள்ள குழப்பத்தைப் போக்க முடியும். பொதுஜன ஐக்கிய முன்னணி சமாதானத்திற்கு எதிரானது என புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்தில் தெரிவித்த கருத்துக்கள் உளப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டதாக தான் கருதவில்லை என்றும் கதிர்காமர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# எமது நிபந்தனைகளை அரசு ஏற்றால் 19வது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு

(கொழும்பு)

19வது திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் விடயத்தில் 'நுஆ' பொ.ஐ.முன்னணிக்கு கட்டுப்பட்டிருக்கவில்லை. அரசாங்கம் எமது சில நிபந்தனைகளை ஏற்குமாயின் திருத்தச் சட்ட மூலத்தை ஆதரிப்பது பற்றி நாம் ஆலோசிக்கத் தயார். என்று 'நுஆ' வின் சிரேஷ்ட தலைவரும் எம்.பியுமான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கான தனி நிர்வாக மாவட்டம் என்ற கொள்கையில் விடாப்பிடியாக உள்ளீர்களா? என்று கேட்டபோது புலிகள் தனிஅரசிற்கான கோரிக்கையைக் கைவிட்டு பிராந்திய சுயாட்சியைக் கோருகின்றனர். இந்நிலையில் அரசாங்கம் நம்முடன் பயனுள்ள வகையில் பேச்சுக்கள் நடத்தி முஸ்லிம்களின் நலன்கள் தொடர்பாக சாதகமான நிலைப்பாட்டிற்கு வருமாயின் நாமும் தனி நிர்வாக மாவட்டத்திற்கான கோரிக்கையை கைவிடத்தயார்.

பேச்சுவார்த்தையின் இறுதியில் வடக்குக் கிழக்கை இணைகக்கும் போது முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அரசாங்கம் தனியான ஏற்பாடுகளைச் செய்யுமாயின் நாம் 19வது திருத்தச் சட்டத்தை ஆதரிக்கத் தயார் என்றும் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். (த)

## அமைச்சர் ஹக்கீம் சவுதிக்குப் பயணம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமஅமைச்சருமான ரவூப் ஹக்கீம்நேற்று சவுதி அரேபியாவுக்குப் பயணமாகியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் விஷேட செய்தி ஒன்றையும் சவுதி மன்னரிடம் கையளிக்கவுள்ளார்.

சவுதி அரேபிய விஜயத்தை முடித்துக் கொண்டு எதிர்வரும் 2ந் திகதி அமைச்சர் நாடு திரும்புவார். (த-5)

## யாழ் நோக்கி வந்த...

ணத்திற்கு செல்பவர்கள் என ஆரம்ப விசாரணைகளை நடத்திய முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மரணமடைந்த மதுரங்குளி யைச் சேர்ந்த அக்பர் அலி (வயது 36), பஸ்ஸின் நடத்துநர் அஜித் (வயது 25) ஆகிய இருவரின் உடல்கள் இனம் காணப்பட்டுள்ளது.

இனம் காணப்படாத நிலையில் பெண்ணொருத்தியினதும், ஆண் ஒருவரினதும் சடலங்கள் வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

காயங்களுக்குள்ளானவர்கள புத்தளம், வவுனியா, யாழ்ப்பாணம், மானிப்பாய், வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, சங்கானை பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

அலோசியஸ் என்பவர் அவசர சிகிச்சைக்காக சிலாபம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் நகர வைத்தியசாலையில் 7ம் வார்ட்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய பயணிகளின் விபரங்கள் வருமாறு:

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் (40), சிங்கராசன் (40), விக்னேசன் (26), எம்பர்ஸ்ட் (20), நேசரத்னம் (48), சிவனேஷ்வரன் (35), கதிரவேலு (51), நந்தன் (27), வீரமன் (29), பலுலூன் மரைக்கார் (38), சேரன் (30), சாரா (02), பிரகணேஷன் (52), பாஸ்கரன் (41), தெய்வநாயகம் மாதம்), சிப்பியா (11மாதம்), தெய்வானை (58), கரவெட்டி எஸ்.வீரசிங்கம் (56), காலி பிரியன்த குமார (32), சுந்தரமூர்த்தி (40), வில்பர்ட் கிறிஸ்டி (40), புத்தளம் பவுசியா (22), லிபீசியா (36), தொண்டமானாறு கே .சின்னராஜா (40), எஸ். விஜயமலர் (39), லக்ஷவி (5), எம். பாரூக் (53) ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பஸ் விபத்துச் சம்பவத்தில் காயமடைந்த சுன்னாகத்தைச் சேர்ந்த எம்.சத்தியராஜன் (வயது 28), உரும்பிராயைச் சேர்ந்த கே. கணேசலிங்கம் (வயது 55) அகிய இருவரும் யாழ் போதனா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இரு மாதங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து யாழப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பஸ்ஸொன்று புத்தளம் பாலாவியில் புகையிரதக்கடவையை ஊடைத்துக் கொண்டு புகையிரதத்துடன் மோதியதில் சாரதி கொல்லப்பட்டதுடன், 12 பயணிகள் காயமுற்றதும் குறிப்பிடத்தக்கது.

முந்தல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன விசாரணகைளை நடத்தி வருகிறார். (ந-6)

## போலியோ...

5வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இப்போலியோ தடுப்புச் சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளதுடன் போலியோத் தடுப்புச் சொட்டு மருந்து

## அரசு...

புலிகளினால் கடந்த 7வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 இராணுவத்தினரும் நேற்றுக் கிளிநொச்சிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இன்று காலை ஓமந்தைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

1996ம் ஆண்டு முல்லைத்தீவுத்தாக்குதல், 1999ம் ஆண்டு கிளிநொச்சித் தாக்குதல், 2001ம் ஆண்டு ஆனையிறவுத் தாக்குதல் சம்பவங்களின் போது கைது செய்யப்பட்ட இராணுவத்தினரில் விடுதலைசெய்யப்படவுள்ள இந்த 7பேருமே விடுதலைப்புலிகளிடம் இறுதியாக இருந்த கைதிகளாவர்.

இன்று நடைபெறவுள்ள யுத்தக் கைதிகளின் பரிமாற்றத்தினால் ஓமந்தை, முகமாலை சோதனைச் சாவடிகள் 9மணி

## பிரித்தானிய...

முகமாலை ஊடாக கிளிநொச்சிக்குச் சென்றார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் நடுவப் பணியகத்தில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தையின் போது வன்னியில் இடம் பெற்றுவரும் புனர் வாழ்வு வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரெபன் ஈவன்ஸ"டன் சர்வதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிக்கோலா பிறிவர் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் மார்க்வெலடன், அரசியல் பிரிவின் இரண்டாவது செயலாளர் மாகிரேட் றொங், ஊடகத் தொடர்பாடல்

## அரசியல்...

உத்தேசிக்கப்பட்டிருக்கும் திருத்தப்பிரேரணையின்படி பெரும்பான்மையான எம்.பிக்களின் ஆதரவு பிரதமர் ஒருவருக்க இருக்கும் வரை நிறைவேற்ற ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது.

19வது திருத்தப் பிரேரணை காரணமாகக் கட்சியில் பிளவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, பாராளுமன்றக் கலைப்பு விடயத்தில் அரசாங்கத்துடன ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்து கொள்ளும் நோக்கில் 15 பொ.ஐ.முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த செய்வாய் இரவு கொழும்பில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். (த)

டுள்ளார்.

புத்தளம் நகர வைத்தியசாலையில் 7ம் வார்ட்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய பயணிகளின் விபரங்கள் வருமாறு:

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் (40), சிங்கராசன் (40), விக்னேசன் (26), எம்பர்ஸ்ட் (20), நேசரத்னம் (48), சிவனேஷ்வரன் (35), கதிரவேலு (51), நந்தன் (27), வீரமன் (29), பலுலுான் மரைக்கார் (38), சேரன் (30), சாரா (02), பிரகணேஷன் (52), பாஸ்கரன் (41), தெய்வநாயகம் (58), அவானுஜா (35), யோகலட்சுமமி (35), ஜெயசீலன் (6), மேரி அம்மா (36), சேர்வியா (55), பவானி (25), ஆறுமுகம் (70), ராஜகுலன் (38), பாத்திமா (30), கருணாநிதி (41), விஜயமலர் (39), முபார் (42), பைசல் (35), ஜீவரானி (37), நிகாட், நாகேஸ்வரி (39), சுதர்ஷனி (21), அபூதாஹிர் (39), முபிகா, குலசேகரம் (41), மரியம் (44), நசீமா பேகம் (27), ரசிக (01), எப்.நளீபா (11

ஊடைத்துக் கொண்டு புகையிரதத்துடன் மோதியதில் சாரதி கொல்லப்பட்டதுடன், 12 பயணிகள் காயமுற்றதும் குறிப்பிடத்தக்கது.

முந்தல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன விசாரணைகளை நடத்தி வருகிறார்.

(ந-6)

## போலியோ...

5வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இப்போலியோ தடுப்புச் சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளதுடன் போலியோத் தடுப்புச் சொட்டு மருந்து முன்னர் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதனைக்கருத்தில் கொள்ளாது 5வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு மருந்தை கொடுக்குமாறு சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

இதேவேளை குடாநாட்டில் குறித்த நிலையங்களில் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை சொட்டு மருந்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

எத்தனை ஆயிரம் தோட்டா விதைகளைத் தாங்கிய அரண் பனை
அத்தனை ஆயிரம் விதைகளைத் தூவி நன்றி செய்வோமே

சக்தி FM

சக்தி FM இல் உங்கள் விளம்பரங்களை உடனுக்குடன் ஒலிபரப்புச் செய்திட நீங்கள் தெடர்பு கொள்ளவேண்டிய முகவரி

மாருதி ரெக்ஸ்
1, பஜார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிற்றி காமன்ஸ்
535, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P-021-2223453

[5947]

இவர்கள் அனைவரும் இன்று காலை ஓமந்தைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

1996ம் ஆண்டு முல்லைத்தீவுத் தாக்குதல், 1999ம் ஆண்டு கிளிநொச்சித் தாக்குதல், 2001ம் ஆண்டு ஆனையிறவுத் தாக்குதல் சம்பவங்களின் போது கைது செய்யப்பட்ட இராணுவத்தினரில் விடுதலைசெய்யப்படவுள்ள இந்த 7பேருமே விடுதலைப்புலிகளிடம் இறுதியாக இருந்த கைதிகளாவர்.

இன்று நடைபெறவுள்ள யுத்தக் கைதிகளின் பரிமாற்றத்தினால் ஓமந்தை, முகமாலை சோதனைச் சாவடிகள் 9மணி முதல் நண்பகல் 12மணிவரை மூடப்பட்டிருக்கும்.

யுத்தக் கைதிகள் பரிமாற்ற நிகழ்வைத் தொலைக்காட்சி மூலம் நேரடியாக ஒளி பரப்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 7இராணுவத்தினரும் பிரதமரை இன்று சந்திப்பர்

இன்று விடுதலையாகவுள்ள 7இராணுவத்தினரும் இன்றையதினம் பிற்பகல் 4மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்திக்கவுள்ளனர்.

முதற்தடவையாக இடம்பெற்ற அப்போதைய கைதிகளின் பரிமாற்றத்தில் புலிகள் தரப்பில் யாழ்மாவட்டத் தளபதியாக இருந்த கிட்டுவும் ரஹீமும் கலந்து கொண்டனர்.

அரச தரப்பில் யாழ் கோட்டை இராணுவத் தளபதி கொத்தலாவல கலந்து கொண்டார்

1986ல் இடம்பெற்ற இக்கைதிகளின் ப்ரிமாற்றத்தின் போது மன்னார் தாக்குதலில் கைது செய்யப்பட்ட இரண்டு இராணுவத்தினரை புலிக்ள் விடுதலை செய்ய அரசு, புலிப்போராளிகளான அருணாவையும், நெல்சனையும் விடுதலை செய்திருந்தது.

துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தையின் போது வன்னியில் இடம் பெற்றுவரும் புனர் வாழ்வு வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரெபன் ஈவன்ஸ்"டன் சர்வதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிக்கோலா பிறிவர் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் மார்க்வெலடன், அரசியல் பிரிவின் இரண்டாவது செயலாளர் மாகிரேட்றொங், ஊடகத் தொடர்பாடல் நிலக்ஷன் சுவர்ணராஜ், சர்வதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் இலங்கைக்கான திட்டமிடல் முகாமையாளர் பொப் லிவரிங்டன் பிரித்தானியத் தூதுரகத்தைச் சேர்ந்த அன்ரிஸா முலகலா ஆகியோரும் வன்னி சென்றிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன், தொல்காப்பியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்ட பிரிட்டிஷ் தூதுவரும், அவரது குழுவினரும் நேற்றுப் பிற்பகல் உலங்குவானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர்.

(ம)

பெரும்பான்மையான எம்.பிக்களின் ஆதரவு பிரதமர் ஒருவருக்க இருக்கும் வரை நிறைவேற்ற ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது.

19வது திருத்தப் பிரேரணை காரணமாகக் கட்சியில் பிளவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, பாராளுமன்றக் கலைப்பு விடயத்தில் அரசாங்கத்துடன ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்து கொள்ளும் நோக்கில் 15 பொ.ஐ.முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த செய்வாய் இரவு கொழும்பில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். (த)

## இன்று...

பத்தின் பேரில் கொழும்பில் வைத்து அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப்புலிகளினால் விடுவிக்கப்படவுள்ள இராணுவத்தினர்

சாகரவர்த்தனா கப்பலின் கட்டளை அதிகாரி கொமாண்டர் அஜீத்குமார போயாகொட மற்றும் சிப்பாய்கள் எச்.எச். குணவர்த்தனா, யூ.எஸ்.ஆர். ஜெயகுமார, பி.பி.நவிந்தஜெயலத், எம்.பிரியங்கார டீ சில்வா, ரி.பி. காமினி திஸநாயக்கா, விமல் சாந்த ஆகிய ஏழு பேர் விடுதலை செய்யப்படவுள்ளனர். (ம)

அறிவித்தல்

குருநகர் நீர்த்தாங்கியிலும். நீர்க்குழாய்களிலும் சுத்திகரிப்பு வேலை மேற்கொள்ளப்படவுள்ளதால் 29.09.2002 அன்று ஞாயிற்றுக்கிழமை குருநகர் தாங்கியு,டாக விநியோகிக்கப்படும் நீரை பாவனையாளர் பயன்படுத்தவேண்டாமென இத்தால் கேட்டுக்கொள்கின்றேன். மறுநாள் 30.09.2002 திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படும் நீரைப்பயன்படுத்தலாம்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

[C/5040]

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.